Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 155 | சனிக்கிழமை 30 ஏப்ரல் 2022 | சித்திரை 17 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 40

## வரி உயர்வே வழி!

### நிதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 30
நாட்டின் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதால், தற்போது நாட்டின் விற்பனை வரியை உயர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை என நிதியமைச்சர் அலி சப்ரி தெரிவித் 10 ➤

## புதிய பிரதமருடன் இடைக்கால அரசு

### ஜனாதிபதி இணக்கமென மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 30
புதிய பிரதமருடன் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இணக்கம் வெளியிட்டுள்ளார் என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
ஜனாதிபதியுடனான 10 ➤

இடைக்கால அரசை அமைப்பதற்காக

## பிரதமர் மஹிந்த விலக வேண்டும்

### தீர்மானம் நிறைவேற்றுவதற்காக மகாசங்கம் இன்று கூடுகின்றது

கொழும்பு, ஏப். 30
சர்வ கட்சி இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ச உடனடியாகப் பதவி விலக வேண்டும் 15 ➤

## திங்கள் விடுமுறை

கொழும்பு, ஏப். 30
மே தினத்துக்கு மறுநாளான எதிர்வரும் திங்கட்கிழமை அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் தினமான மே தினம் இம்முறை 15 ➤

## மே தினத்தன்று மின் தடைப்படா

கொழும்பு, ஏப். 30
மே மாதம் முதலாம் திகதி தொழிலாளர்கள் தினத்தன்றும் மே மாதம் மூன்றாம் திகதி ரமழான் நோன்பு தினத்தன்றும் மின் தடைப்படாது என்று அறிவிக்கப்பட்டுள் 10 ➤

# இடைக்கால அரசை அமைக்க வாருங்கள்

### ஜனாதிபதி பகிரங்க அழைப்பு

### பிரதமர் தொடர்பில் மௌனம்

### நீள்கிறது அரசியல் குழப்பம்

**கொழும்பு, ஏப்ரல் 30**
**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவிவிலக வேண்டும் என வலியுறுத்தி நாட்டில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் நிலையில், அவர் பதவிவிலக மறுத்து, சர்வ கட்சி இடைக்கால அரசுக்கு ஜனாதிபதி மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.** 15 ➤



பண்டாரநாயக்கவுக்கு கறுப்புத்துணி

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் நாளுக்குநாள் தீவிரமடைந்து வருகின்ற நிலையில், இலங்கையின் முன்னாள் பிரதமரான எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் உருவச்சிலையின் கண்கள் நேற்றையதினம் இளைஞர்களால் கறுப்புத் துணிகொண்டு கட்டப்பட்டன. தனிச்சிங்களச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு இனவாத முடிவுகளை மேற்கொண்டு இலங்கையில் குருதிச் சகதி பெருக்கெடுக்க காரணமாகவிருந்தவர்களில் பண்டாரநாயக்க முதன்மையானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ–ம)

## இந்த வருட மே தினம் துக்கநாளாக அறிவிப்பு

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

கொழும்பு, ஏப். 30
இந்தவருடம்மேதினத்தை, வாழ வழியில்லாத துக்க நாளாக அறிவித்துள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், மே மாதம் முதலாம் திகதியன்று நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் பேரணிகள் எதிலும் பங்கு 15 ➤

## சர்வகட்சிக் கூட்டம் திடீரென நிறுத்தம்!

கொழும்பு, ஏப். 30
ஜனாதிபதி மாளிகையில் நேற்றுக் காலை நடைபெறவிருந்த சர்வ கட்சிக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ள 10 ➤

## 'பகைவர்க்கும் அருள்வாய்' தமிழரின் நிலைப்பாடு இது

### சட்டப் பேரவையில் ஸ்டாலின் புகழாரம்

சென்னை, ஏப். 30
ஈழத் தமிழர்களுக்கு உதவி செய்வதற்கு தமிழக அரசு முயற்சிகளை மேற்கொண்டபோது, தமிழர்களுக்கு 15 ➤

போர்க்கால அடிப்படையில்

## இலங்கைக்கு தமிழ் நாடு தொன் கணக்கில் உதவி

### நிதி உதவிகளும் அறிவிப்பு

சென்னை, ஏப். 30
இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, தொன் கணக்கில் பல்வேறு உதவிகளை அறிவித்துள்ளது தமிழக அரசு. அவற்றின் பெறுமதி சுமார் 575 கோடி இலங்கை ரூபா என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
தமிழக சட்டப்பேரவை நேற்றுக் கூடியபோது இது தொடர்பில், தமிழக முதலமைச்சர் 10 ➤

## பரீட்சை ஆணையாளராக தமிழ்ப் பெண் நியமனம்!



கொழும்பு, ஏப். 30
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளையின் ஆணையாளராக தமிழ்ப் பெண்மணி திருமதி திலக 15 ➤

## ஈழத் தமிழர்களுக்கு இரண்டு கோடி ரூபா

### தமிழக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அறிவிப்பு

10 ➤

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டால் போராட்டங்கள் எல்லாம் தானாக அடங்கிவிடும்

## 19ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டுவருவது பற்றி சாவகாசமாகப் பார்த்துக்கொள்ளலாம் என்கிறார் மஹிந்த



கொழும்பு, ஏப். 30

**இன்று நாட்டில் நிலவுவது பொருளாதாரப் பிரச்சினைதான். எமக்கு நட்பு நாடுகள் உதவும். பிரச்சினைகளுக்கு நாம் பொருளாதாரத் தீர்வு வழங்குவோம். மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டால், இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் ஓய்ந்துபோய்விடும். அரசமைப்புத் தீர்வு என்பது பெரிய விடயமல்ல. அதனால் பொருளாதாரப் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. முதலில் மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளை நான் தீர்க்கிறேன். அப்போது இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் நின்றுவிடும் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசனிடம் தொலைபேசி உரையாடலின்போது கூறியுள்ளார்.**

மனோகணேசனுக்கும், மஹிந்தவுக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது. இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தொலைபேசியில் சபாநாயகர் மஹிந்த யாப்பாவிடம் பேசிவிட்டு, பிரதமர் மஹிந்த ராஜபக்சவை தொடர்புகொண்டு, "20ஆம் திருத்தத்தை அகற்றிவிட்டு, 19ஆம் திருத்தத்தைக் கொண்டு வருவதாகச் சொன்னீர்கள். அமைச்சரவையிலும் அனுமதிபெற்றதாகவும் சொன்னீர்கள். ஐக்கிய மக்கள் கூட்டணிசார்பிலும்நாம் அரசமைப்பு திருத்த வரைவை வழங்கியுள்ளோம். அதில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை முழுமையாக அகற்றுவது பற்றி கூறப்பட்டுள்ளது. எனினும் அரசாங்கத்தின் வரைவுக்கே முதலிடம் கிடைக்கும். 20ஆம் திருத்தத்தை அகற்றும் எல்லா முயற்சிகளுக்கும் நாம் ஆதரவளிப்போம். முதற்கட்டமாக, 20ஐ அகற்றிவிட்டு, 19ஐ கொண்டு வருவதையும் நாம் ஆதரிப்போம். ஆகவே நீங்கள் எப்போது உங்கள் சட்டவரைவை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருகிறீர்கள்? இதுபற்றி சற்று முன் சபாநாயகர் மஹிந்த யாப்பாவிடம் பேசினேன். உங்கள் சட்ட வரைவு எப்போது சபைக்கு வரும் என்பது பற்றி, அவர் தனக்கு எதுவுமே தெரியாது என்கிறார்" என்று சொன்னேன்.

அதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, 20ஆம் திருத்தத்தை அகற்றிவிட்டு 19ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதாக நான் சொன்னதும், அதற்கு அமைச்சரவையில் சம்மதம் பெற்றதும் உண்மைதான். ஆனால், அதற்கு மேல் என்ன நடந்தது? என எனக்குத் தெரியாது. ஒருவேளை அது அமைச்சரவை உபகுழுவில் இருக்கலாம். அதுபற்றி அவசரப்படத் தேவையில்லை. அது சாவகாசமாக வரும்போது வரட்டும். முதலில் மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளை நான் தீர்க்கிறேன்" என்று கூறினார்.

"அரசமைப்புத் திருத்தம் மூலம் நாட்டில் உடனடியாக இறுதித் தீர்வுவராது என்பது எனக்கு தெரியும். ஆனால் நாட்டில் ஸ்திரத்தன்மை வருமே. அது தீர்வைக் கொண்டுவரும். இன்று மக்கள் நாடுமுழுக்கப் போராடுகிறார்கள். அவதிப்பகிறார்கள். இது உங்களுக்குப் பிரச்சினை இல்லையா?" என்று திருப்பி கேட்டேன். "இல்லை, கவலை வேண்டாம் தம்பி..! மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டால், இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் ஓய்ந்து போய்விடும். அதற்குதான் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க போகிறேன். அப்புறம் பாருங்கள், இந்தப் போராட்டங்கள் எல்லாமே முடிவுக்கு வந்துவிடும்" என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச கூறி முடித்தார்.

20ஆம் திருத்தத்தை அகற்றிவிட்டு 19ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதாகவும், அதற்கு அமைச்சரவையில் சம்மதம் பெற்றதாகவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ச சொல்லி இருந்தாலும், இதற்கு அவர் முன்னுரிமை அளிக்கவில்லை என இப்போது தெரிகிறது. நாட்டில் மக்கள் போராடுவது, உணவு, மருந்து, மின்சாரம், பெற்றோல், எரிவாயு, உரம் போன்ற பொருளாதார தேவைகளுக்காத்தான் என அவர் உறுதியாக நம்புகிறார். ஆகவே அவற்றுக்குத் தீர்வு கண்டால் இந்தப் போராட்டங்கள் எல்லாம் முடிவுக்கு வந்துவிடும் என அவர் நம்புகிறார். இதற்காக அவருக்கு நட்பு நாடுகள் உதவும் எனவும் அவர் நம்புகிறார். ராஜபக்ச குடும்பத்தார்மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல், வீணடிப்பு, தவறான நிதிக்கொள்கை போன்ற விடயங்கள் பற்றி அவர் எதுவும் கூறாவிட்டாலும்கூட, இவற்றுக்கான போராட்டங்களையும் கூட அவர் முக்கியமாகக் கருதவில்லை எனத் தெரிகிறது.

இதுபற்றி ஐக்கிய மக்கள் கூட்டணி தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் பேசினேன். ஏனைய எதிரணிக் கட்சித் தலைவர்களிடமும்பேசவுள்ளேன். அனைத்து எதிரணிக் கட்சிகளும் தங்கள் செயற்பாடுகளைக்கூட்டிணைக்க வேண்டும் என விரும்புகிறேன்- என்றுள்ளது. (ஒ-5)

---

# வெளிநாட்டுக்கடன்களை மறுசீரமைப்பதே இலக்கு

*மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு*

கொழும்பு,ஏப்.30



வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதே இலங்கை அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை வர்த்தக சம்மேளனக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். உள்நாட்டில் பெறப்பட்ட கடன்களை மறுசீரமைக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைப் பிரதிநிதிகள் குழுவொன்று அண்மையில் வொஷிங்டனில் சர்வதேச நாணய நிதியத்தினருடன் கலந்துரையாடல்களை நடத்தியது. அதில் நிதி அமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தக் கலந்துரையாடல்களின் முன்னேற்றம் குறித்தும் ஆளுநர், இலங்கை வர்த்தக சம்மேளனத்துக்கு விளக்கமளித்தார். (க-இ)

---

# மருந்துகளை வழங்கி உதவக் கோரிக்கை

## நியூஸிலாந்து தூதுவரிடம் முன்வைத்தார் சுகாதார அமைச்சர்

கொழும்பு, ஏப். 30

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளால் தோற்றம் பெற்றுள்ள மருந்துத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு காண்பதற்கு நியூஸிலாந்திடமிருந்து உதவிகளை எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான நியூஸிலாந்து தூதுவர் மைக்கல் அப்லிடனுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே சுகாதார அமைச்சர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இலங்கையுடன் தொடர்ந்தும் நட்புறவைப் பேணுகின்றமைக்கு நியூஸிலாந்துக்கு நன்றியையும் தெரிவித்தார். மேலும் இலங்கையில் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பிலும், சுகாதாரத்துறை எதிர்கொண்டுள்ள சவால்கள் தொடர்பிலும் நியூஸிலாந்து தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

இதுதொடர்பில் தெளிவுபடுத்திய சுகாதார அமைச்சர், இந்தச் சந்தர்ப்பத்தில் நியூஸிலாந்து அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

குறிப்பாக நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த நியூஸிலாந்து தூதுவர், "நியூஸிலாந்தும் அந்நாட்டில் வாழும் இலங்கையர்களும் வழங்கும் உதவி தூதரகத்தின் ஊடாக இலங்கைக்கு வழங்கப்படும்" என்று தெரிவித்தார். (ஒ-இ)

---

# பால், இறைச்சியை கடனுக்கு வழங்கவுள்ள நியூஸிலாந்து

கொழும்பு, ஏப். 30

இலங்கைக்குப் பால் மற்றும் இறைச்சியை சலுகைக் கடன் திட்டத்தில் வழங்க நியூஸிலாந்து இணங்கியுள்ளதாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

இலங்கைக்கான நியூஸிலாந்து தூதுவருக்கும், அமைச்சர் தினேஸ் குணவர்தனவுக்கும் இடையிலான சந்திப்பின்போதே மேற்படி இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் மேம்பாட்டு உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்தும் இருவரும் கலந்துரையாடினர். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோசமான நிலைமையை நோக்கியே செல்கின்றோம்

## மீண்டும் எச்சரிக்கிறார் முன்னாள் பிரதமர் ரணில்



**கொழும்பு, ஏப். 30**

**நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை எதிர்வரும் மாதங்களில் மேலும் மோசமடையும் அபாயம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் வைத்து உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"எமது பொருளாதார நெருக்கடி நிலைமை மேலும் மோசமடையலாம். தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கான கடன், டொலர் பற்றாக்குறை, வருமானம் குறைந்தமை மற்றும் செலவுகள் அதிகரித்துள்ளமையே இதற்குப் பிரதான காரணம்" என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)



## இறந்த நிலையில் கரையொதுங்கிய முதலையால் மக்கள் அச்சம்

கிளிநொச்சி, ஏப்.30

கிளிநொச்சி, கல்மடுக்குளத்தில் இறந்த நிலையில் முதலை ஒன்று கரையொதுங்கியுள்ளது என அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இறந்த நிலையில் முதலை கரையொதுங்கியதால் அச்சம் ஏற்பட்டுள்ளது எனவும் இதுகுறித்து உரிய அதிகாரிகள் பரிசீலனை செய்யவேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்களால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-113)

## எரிபொருள் நெருக்கடி ஆசிரியர்களுக்குத் தீர்வு

கொழும்பு, ஏப்.30

எரிபொருள் நெருக்கடியால் தூரப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அவர்களின் வசிப்பிடத்துக்கு அருகிலுள்ள பாடசாலையில் கடமையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. ஆசிரியர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைக்கு கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இணக்கம் தெரிவித்துள்ளார்.

எனினும், இவ்வாறானதொரு தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் இரு மாதங்களுக்குள் உடன்படிக்கை

கொழும்பு.ஏப்.30

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் தொடர்பில், அடுத்த இரண்டு மாதங்களுக்குள் உடன்படிக்கையை எட்ட முடியும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

"இந்த உடன்படிக்கைக்கான பொருளாதாரக் கட்டமைப்பை நிறுவும் பணிகளில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. அதற்காக கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்தவேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் பணிக்குழாம் மட்டத்திலான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்கு முன்னர், அத்தியாவசியமாக நிறைவேற்ற வேண்டியவை என எதிர்பார்க்கப்படும் செயற்பாட்டைப் பூரணப்படுத்த வேண்டும்" - என்றார். (க-இ)

# கோத்தாவுக்கான நிதியை வெட்டிக்குறைக்கவும்

## சபாநாயகரிடம் கடிதம் கையளித்த குமாரவெல்கம கோரிக்கை

கொழும்பு, ஏப். 30

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து நிதியையும் குறைத்து அவரைப் பதவி விலகுமாறு வலியுறுத்த வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

சபாநாயகருக்குக் கடிதம் ஒன்றின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபயவை பதவியில் இருந்து நீக்க நாட்டையும் மக்களையும் காப்பாற்ற நாடாளுமன்றத்தால் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய 7 நடவடிக்கைகள் குறித்தும் குமார வெல்கம பரிந்துரைத்துள்ளார்.

மேலும், நம்பிக்கையில்லாப் பிரேரணை அல்லது இடைக்கால அரசாங்கம் தொடர்பான எந்தவொரு முன்மொழிவுக்கும் வாக்களிக்கப்போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார். (ஒ-இ)




**மு**ந்தநாள் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில நடந்த ஒரு சம்பவம் இது. மத்தியான நேரம் ஒரு மோட்டர் சைக்கிளில ஒருத்தர் அளவான வேகத்தில வந்து கொண்டிருந்தார். 'படீர்' என்டொரு சத்தம். முன்னால வந்த ஒருத்தர் நடந்ததைப் பார்த்திட்டு 'எடக்கடவுளே' என்ட மாதிரி தலையில கையை வைச்சார். நீங்கள் நினைக்கிற மாதிரி மோட்டர் சைக்கிளில வந்தவர் அக்சிடென்ட் ஆகேலை. அவரின்ர பைக்கில இருந்த சொப்பிங் பை தான் 'படீரெண்டு' கிழிஞ்சு, அதுக்குள்ள இருந்த சாப்பாட்டுப் பார்சல் றோட்டில அப்பிடியே பரவிப் போய்க் கிடந்தது. நடுறோட்டில அநியாயமா கொட்டுண்டு கிடந்த கோழிச்சாப்பாட்டை கவலையோட பார்த்திட்டு அந்த மோட்டர் சைக்கிள்காரர் அப்பிடியே போட்டார்.

ஆனால், இப்ப சாப்பாடு விக்கிற விலையில அந்த றோட்டில கொட்டுண்ட ரண்டு சாப்பாடும் ஆயிரம் ரூபாயாவது வரும். ஆனால் அதை ஒரு உதவாத சொப்பிங் பையில கொண்டு வந்ததால அவ்வளவும் அநியாயம். இப்பிடி சாப்பாடு வீணாப் போனதுக்கு காரணம், அந்த தரமில்லாத சொப்பிங் பைதான். ஆனால் இப்ப அப்பிடி தரமில்லாத பொருள்தான் எல்லா இடமும் கிடைக்குது. 'அண்ணை இது சரியில்லை, விலை கூடினாலும் பரவாயில்லை, வேற நல்ல பொருளாத்தாங்கோ' எண்டு கேட்டாலும், இப்பிடி ஒண்டுக்கும் உதவாத, முந்திக் கழிச்சு வைச்ச இப்பிடியான பொருளைத் தான் கடைக்காரர் தருகினம். 'இப்ப ஒண்டும் வரத்து இல்லை. இதுதான் கிடக்கு' எண்டு அதுக்குச் சாட்டு வேற சொல்லுகினம். பொருள் ஒண்டும் வரத்து இல்லையெண்டால், இந்த உதவாத பொருள் மட்டும் எப்பிடி வந்தது? அங்கதான் இருக்கு சூட்சுமம்.

இப்ப கனகடையளில விக்கிற பொருள்களில அரைவாசிக்கும் மேல, 'உதை விக்கவே ஏலாது' எண்டு கடைக்காரர் கழிச்சு விட்டதுகள்தான். ஆனால் வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும் எண்ட மாதிரி, கழிச்சு விட்ட பொருள்களுக்கு இப்ப இலங்கை நெருக்கடி ஒரு வாழ்வு குடுத்திருக்கு. அதால கடைக்காரர் நல்ல பொருள் இருந்தாலும் இப்போதைக்கு அதுகளைத் தூக்கி உள்ளுக்க போட்டுட்டு, முந்தி விலைபோகாமல் இருந்ததுகளையெல்லாம் எடுத்து முன்னுக்கு வைச்சிருக்கினம். இப்ப இருக்கிற பொருள் தட்டுப்பாட்டால கனபேர், பொருள்களை வாங்கினாலே காணும் எண்டு நினைக்கினமே தவிர, அது தரமானதோ இல்லையோ எண்டு பாக்கிறேலை. அப்பிடி தரம் பார்த்தால் கிடைக்கிறதும் இல்லாமல் போடும். அதை கடைக்காரர் வடிவாப் பாவிச்சுத்தான் இப்ப தவிச்ச முயல் அடிக்கிற மாதிரி, கண்ணை மூடிக்கொண்டு கண்ட கழிவுகளையெல்லாம் வித்து கல்லா கட்டுகினம். அப்பிடி தரமில்லாத பொருள்களை குடுக்கிறதால வந்த விளைவுதான், அண்டைக்கு சொப்பிங் பை, வெறும் ரண்டு சோத்துப் பார்சலை தாங்கேலாமல் நடுறோட்டில கிழிஞ்ச சம்பவம். கடைக்கார ஆக்கள் கொஞ்சமாவது வாங்கிற காசுக்கு ஓரளவுக்கெண்டாலும் நல்லா பொருள்களை குடுக்க வேணும். அதைவிட்டுட்டு, இப்பிடி சனங்களை அந்தரிக்க வைக்காதையுங்கோ.




- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலை, தட்டுப்பாடு 3000 குடும்பங்கள் தொழிலிழப்பு

**யாழ்ப்பாணம்,ஏப்.30**



**எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலையுயர்வு அதிகரிப்பு காரணமாக, வேலணைப் பிரதேசத்தில் கடற்றொழிலை நம்பியிருக்கின்ற 3 ஆயிரம் குடும்பங்கள் தொழிலைக் கைவிடுகின்ற நிலைமைக்குத் தள்ளபட்டுள்ளனர் என்று வேலணைப் பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் ஆறுமுகம் கனகசபை தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மண்டைதீவு முதல் நயினாதீவு வரையான பிரதேசத்தில் பெரும்பாலும் வெளியிணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்தி தொழிலை மேற்கொள்கின்ற கடற்றொழிலாளர்களே உள்ளனர். கடந்த காலங்களில் நாள் ஒன்றுக்கு 50 லீற்றர், 60 லீற்றர் எண்ணெய் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டது. தற்போதைய விலையேற்றத்தால் தொழில் செய்ய முடியாதுள்ளனர். 500க்கும் மேற்பட்ட வள்ளங்கள் முடங்கியுள்ளன. துறையூரில் 500 வெளி இணைப்பு பூட்டுகின்ற இயந்திரங்கள் செயலிழந்துள்ளன. 3ஆயிரம் குடும்பங்களில், 2 ஆயிரம் பேர் கூலி வேலைக்குச் செல்கின்றனர் - என்றார். (க-125)



## ஆசிரிய மாணவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்.30

கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி ஆசிரிய மாணவர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆசிரியர்களுக்கான நியமனங்களை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். சமன் பந்துலசேன வழங்கினார்.

விவசாயம், கலை, விஞ்ஞானம், கணிதம் ஆங்கிலம் மற்றும் சமயம் உள்ளிட்ட 18 பாடவிதானங்களைக் கற்பிக்கும் 355 டிப்ளோமா ஆசிரிய மாணவர்களுக்கே இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் மற்றும் கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச)

## வங்களாவடி எரிபொருள் நிலையத்தை சட்டரீதியாகச் செயற்படுத்தத் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

வேலணைப் பிரதேசசபைக்கு முன்பாகவுள்ள வங்களாவடி எரிபொருள் நிரப்பு நிலையத்தை, சட்டரீதியாகச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

வேலணைப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வில், குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் அனுமதிப்பத்திரம் தொடர்பாக சபை உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டது. வேலணைப் பிரதேச சபையின் காணியில் காணப்படுகின்ற குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் எரிபொருள் தாங்கி, இன்னும் புதைக்கப்படாமல் இருப்பதால், மண்ணெண்ணெய் பெறுவதற்கு பொது மக்கள் சிரமப்படுகின்றனர். அனுமதிப்பத்திரமின்றிச் செயற்படுவதா இதற்குக் காரணம் என்று உறுப்பினரொருவர் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த செயலாளர், தற்சமயம் பிரதேசசபையின் காணியிலேயே எரிபொருள் நிரப்பு நிலையம் காணப்படுகின்றது. 1969ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சில சமயங்களில் பிரதேசசபையிடம் குறித்த உரிமம் அல்லது அனுமதிப்பத்திரம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டிருக்கலாம். அது தொடர்பாக ஆராய்ந்தோம் எதுவித ஆவணங்களும் கிடைக்கப்பெறவில்லை. குறிப்பாக எரிபொருள் தாங்கியை நிலத்தில் புதைப்பதற்கு, அனுமதிப்பத்திரம் இல்லாமையால், நகர அபிவிருத்தி அதிகாரசபையினர் பின்னடிக்கின்றனர் - என்றார்.

இதனையடுத்து சபையின் உறுப்பினர்கள், வெகுவிரைவில் அனுமதிப்பத்திரத்தை எடுத்து கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவோ அல்லது ஏனையவர் மூலமோ சட்டரீதியாகச் செயற்படுத்தலாம் - என்றனர். (க-125)

## முன்னாள் ஆயரின் முயற்சியால் முள்ளிக்குளம் கிராமத்துக்கு விடிவு

மன்னார்,ஏப்.30

மறைந்த மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் முயற்சியால், முள்ளிக்குளம் கிராம மக்களுக்கு விடிவு கிட்டியுள்ளது.

முசலி பிரதேச செயலர் பிரிவில் உள்ள முள்ளிக்குளம் கிராமத்தில் மிசறியோ நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 20 வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் உரையாற்றிய மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் தெரிவிக்கையில்,

இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் அயராத முயற்சியின் காரணமாகவே குறித்த வீடுகள் அமைக்கப்பட்டன. பல வருடங்களுக்கு முன்னர் அவர் கண்ட கனவு இன்று நிறைவேறியுள்ளது. முள்ளிக்குளம் கிராம மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டும் என்பது அவரது எதிர்பார்ப்பு என்றார். நிகழ்வில் மிசறியோ நிறுவனத்தின் இலங்கைக்கான திட்டப் பணிப்பாளர் கெசுமா சாடட், இலங்கை செடெக் நிறுவனத்தின் தேசிய இயக்குநர் அருட்தந்தை மகேந்திரா குணதிலக, வாழ்வுதய நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை அன்ரன், மன்னார் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்தந்தை விக்டர் சோசை மற்றும் முசலி பிரதேச செயலர் ரஜீவ் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-இ)

## கவனிப்பாரற்ற மைதானம்: போட்டியாளர்கள் சிரமம்

சாவகச்சேரி,ஏப்.30

சாவகச்சேரி நகரை அண்டிய பகுதியில் உள்ள, நகர சபையின் பொது விளையாட்டு மைதானம் கடந்த 5 வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படவில்லை. இதனால் பிரதேச மாணவர்கள் மற்றும் போட்டியாளர்கள் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. பிரதேச விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சுற்றுப் போட்டிகளை, வேறு இடங்களில் உள்ள மைதானங்களில் நடத்தவேண்டியுள்ளது. உலக வங்கியின் நிதிப்பங்களிப்பில் 500 மில்லியன் ரூபா செலவில் மைதானத்தைப் புனரமைக்க நகரசபையுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அது இன்றுவரை கைகூடவில்லை.

நகரப் பகுதியில் உள்ள மைதானத்தைப் புனரமைத்து பொதுமக்களின் பாவனைக்கு வழங்கினால், பிரதேசத்தில், உள்ள பல விளையாட்டுக் கழகங்கள் சுற்றுப் போட்டிகளை நடத்தமுடியும். அத்துடன் மைதானத்தில் மாணவர்களும் தினமும் பயிற்சிகளையும் மேற்கொள்ளமுடியும். எனவே தற்காலிகமாகவேனும், மைதானத்தைப் புனரமைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-9)

## வான் பாய்கிறது கட்டுக்கரைக்குளம்

*போக்குவரத்தில் மக்கள் சிரமம்*

மன்னார், ஏப்.30

மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரைக்குளம் அண்மையில் பெய்த பெருமழையால் வான் பாய்கிறது. இதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளோம் என அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாந்தைமேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குப்பட்ட குருவில்வான், வசந்தபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டுக்கரைக்குளத்தில் வருடத்துக்கு 2 தடவைகள் வான்பாய்கிறது. வான்பாயும் காலங்களில் இப்பாதை ஊடாக போக்குவரத்து செய்யமுடியாத நிலை காணப்படுகிறது. அத்துடன் இதனூடாகப் பயணிப்போர் தவறிவீழ்ந்து காயங்களுக்கும் உள்ளாகின்றனர். எனவே இதுதொடர்பில் உரிய தரப்பினர், நீர் வழிந்தோடும் பகுதிகளில் குழாய்களைப் பொருத்தி நடைபாதை வசதிகளைச் சீரமைத்துத் தருமாறு மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-213)



## யாழ்ப்பாணத்தில் பண்பாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.30

வடக்கு மாகாண பண்பாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் மற்றும் கலாசாரப் பேரவை இணைந்து நடத்திய பண்பாட்டு விழா, யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வில் பல்வேறுபட்டகலைநிகழ்வுகள் இடம்பெற்றன. கலைஞர்களுக்கான யாழ். ரத்னா விருதும், இளங்கலைஞர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றன. யாழ். பிரதேச செயலகத்தின் எல்லைக்குட்பட்ட கலைஞர்களில் பல கலைப்படைப்புக்களை ஆற்றி மறைந்த கலைத்தூது கலாநிதி மரியசேவியர் அடிகளாரை நினைவுறுத்தி, அவரது திருவுருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அடிகளாரின் நினைவுப் பேருரையும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலரும், கலாசார பேரவைத் தலைவருமான சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன், சர்வமதத் தலைவர்கள்,பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கலைஞர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-125)

## விபத்தில் முதியவர் காயம்

சாவகச்சேரி, ஏப்.30

சைக்கிளில் சென்ற முதியவரை பின்னால் வந்த வாகனம் ஒன்று மோதியதில் முதியவர் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் கைதடியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

விபத்தில்காயமடைந்த கைதடி தெற்கைச் சேர்ந்த 71 வயதுடைய முதியவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளாந்தம் எரிவாயு விநியோகத்தை அரைவாசியாகக் குறைத்தது லிட்ரோ

## நகரங்களுக்கு முன்னுரிமை

**கொழும்பு,ஏப்.30**

**நாளாந்தம் சந்தைக்கு விநியோகிக்கப்படும் எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைக்க லிட்ரோ காஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது. அதற்கமைவாக நாளாந்தம் சந்தைக்கு விநியோகிக்கப்படும் எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கை 80 ஆயிரத்திலிருந்து 30 ஆயிரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.**

சுமார் இரண்டு மாதங்களுக்கு இந்தக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்படும். அத்துடன் எரிவாயு விநியோகம் நகரங்கள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுப்படுத்தப்படும். நகரங்களில் உள்ளவர்களுக்கும், விறகு இல்லாமல் எரிவாயு பயன்படுத்துவோருக்கும் முன்னுரிமையில் விநியோகிக்கப்படும். நாட்டில் மாதாந்தம் எரிவாயுத் தேவையை நிறைவு செய்வதற்கு சுமார் 30 மில்லியன் டொலர் தேவை. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது. (க-இ)

## மின்சாரக் கட்டணத் திருத்தம் மக்களிடம் கருத்துக் கோரல்

கொழும்பு,ஏப்.30

மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பாக பொது மக்களிடம் கருத்துக் கோரப்படும் என்று இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையால் முன்மொழியப்பட்டுள்ள விலை அதிகரிப்புக்கான திருத்தம் தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கை அண்மையில் கேட்டறியப்பட்டது. நீர்மின் பற்றாக்குறையால் அதிக எரிபொருளைப் பயன்படுத்தி, மின்சாரம் தயாரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால், ஒரு அலகு மின்சாரத்துக்கான செலவு அதிகரித்துள்ளது. இலங்கை மின்சார சபை ஒரு அலகு மின்சாரத்துக்கு 53 ரூபாவைச் செலவழித்த போதிலும், நுகர்வோர் ஒருவருக்கு 16 ரூபாவே அறவிடப்படுகின்றது. எனினும் கடந்த 8 வருடங்களாக மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். அதேவேளை, மின்சாரக் கட்டண அதிகரிப்புத் தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இதில் மின்சாரக் கட்டணத்தைத் திருத்தும் காலப்பகுதி குறித்து மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. (க-இ)



மட்டக்களப்பில்

## சிவராம் நினைவுதினம்; அஞ்சலியும் போராட்டமும்

படுகொலைசெய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் 17ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு நகரில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபியில் நேற்று நினைவேந்தல் நிகழ்வும் கவனவீர்ப்புப் போராட்டமும் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இவை இடம்பெற்றன. இதன்போது திருவுருவப்படத்துக்கு மலர்தூவி, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து "ஊடகவியலாளர் சிவராமை படுகொலை செய்தது யார்?", "கருத்துச் சுதந்திரம் வேண்டும்", "ஒடுக்காதே ஒடுக்காதே ஊடகவியலாளர்களை ஒடுக்காதே", "படுகொலைக்கு நீதி வேண்டும்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி கவனவீப்புப் போராட்டமும் இடம்பெற்றது. (ச-150)

## சிவராம், ரஜிவர்மன் நினைவு அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.30

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான தராகி சிவராம் மற்றும் செ.ரஜிவர்மன் ஆகியோரின் நினைவுதினம் நேற்று யாழ். ஊடக அமையத்தில் கடைப்பிடிக்கப்பட்டது. நிகழ்வில் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்து , சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (ச-20)








## ஊடகவியலாளர் சிவராம் நினைவுதினம் கடைப்பிடிப்பு

வவுனியா, ஏப்.30

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராமின் 17ஆவது ஆண்டு நினைவுதினம் வவுனியா காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது அவரின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து தீபம் ஏற்றி அஞ்சலிக்கப்பட்டது. (ச-110)

# ஊடகவியலாளர் என்ற போர்வையில் சிவில் உடையில் பொலிஸார் கண்காணிப்பு

## *சாணக்கியன் சீற்றம்*

மட்டக்களப்பு,ஏப்.30

ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறையைக் கண்டித்து, மட்டக்களப்பில் நேற்று எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராமின் நினைவுதினத்தில், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிவேண்டியும், நாட்டில் இடம்பெற்றுவரும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறையைக் கண்டித்தும், தமிழ் மக்களின் உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட ஊடகவியலாளர்களை சிவில் உடையில் வருகை தந்திருந்த பொலிஸார் கமராக்களின் உதவியுடன் காணொலி எடுத்தனர். இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு



மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பிலுள்ள ஊடகவியலாளர்களையும் கொலை செய்யவா முயற்சிக்கின்றீர்கள் என்று பொலிஸாரிடம் கேள்வி எழுப்பினார். (க-இ)

## மாமனிதர் சிவராமுக்கு முல்லையில் அஞ்சலி

முல்லைத்தீவு, ஏப்.30

மாமனிதர் சிவராமின் 17ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு நேற்று முல்லைத்தீவு ஊடக அமையத்தில் தலைவர் சண்முகம் தவசீலன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது திருவுருவப்படத்துக்கு நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள்களின் விவரங்களை காட்சிப்படுத்துமாறு பணிப்பு

கொழும்பு, ஏப்.30

**பொருள்களின் விவரங்களைத் தெளிவாகக் காட்சிப்படுத்துமாறு, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.**

நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்குவரும் வகையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அனைத்து உற்பத்தியாளர்கள், அங்காடி உரிமையாளர்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புக்களில், விநியோகஸ்தரின் பெயர், முகவரி, வாங்கிய திகதி, விலை, பொருள்களின் வகை, அளவு மற்றும் தொகுதி எண் ஆகியவற்றைக் கொண்ட பற்றுச்சீட்டுக்களை கைவசம் வைத்திருக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-இ)



## இப்தார் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் முதன்முறையாக இடம்பெற்ற இப்தார் நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் க. மகேசன், சர்வமதத் தலைவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், முஸ்லிம் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-14-20)

## ஆடல் பாடலுடன்கூடிய கற்றலும் மாணவர்கள் கௌரவிப்பும்

தென்மராட்சி ஏப்.29

கைதடி குருசாமி வித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான மகிழ்ச்சிகரமான ஆடல் பாடலுடன் கூடிய கற்றல் கற்பித்தல் செயற்பாட்டு நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.



இதனையடுத்து பரிசில் வழங்கும் நிகழ்வும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பும் இடம்பெற்றதுடன் அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்கள் மாணவர்களை நெறிப்படுத்தி மேடை ஆற்றுகைகளை நிகழ்த்தினர். (ய-159)

## சிறுப்பிட்டியில் கசிப்பு மீட்பு

புத்தூர், சிறுப்பிட்டி பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து கசிப்பு மீட்கப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். அச்சுவேலி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய குறித்த வீட்டை சோதனையிட்டபோது 750 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது. இதன்போது 55 வயதுடைய சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-23)



## மன்னாரில் இப்தார

யாழ்ப்பாணம், ஏப். 30

வடக்கு மாகாணப் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், மன்னார் மாவட்டச் செயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு, நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது சர்வமதத் தலைவர்களின் ஆசிச் செய்தி வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து நோன்பு திறக்கும் நிகழ்வு இடம்பெற்று, தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலர் ஆர். வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், வட மாகாணத்தின் பிரதம செயலர், மன்னார் மாவட்டச் செயலர், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-14-56)

# காலிமுகத்திடல் போராட்டத்தால் பொலிஸாருக்கு பெரும் நெருக்கடி

## உணவுக்காக 3 கோடி ரூபா நிதி செலவு

கொழும்பு, ஏப்.30

அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் மக்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்தால் பொலிஸ் திணைக்களத்துக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மக்கள் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்த நாள் முதல் இதுவரை அங்கு கடமைக்காக நாட்டின் அனைத்துப் பொலிஸ் பிரிவுகளில் இருந்தும் பொலிஸார் வரவழைக்கப்பட்டுள்ளனர். அங்கு பொலிஸாருக்கு உணவு வழங்குவதற்காக மாத்திரம் பொலிஸ் திணைக்களத்தால், 3 கோடி ரூபா வரை நிதி செலவிட்டுள்ளது. ஆர்ப்பாட்ட இடத்தை இலக்கு வைத்து சுமார் ஆயிரத்து 500 பேர் பொலிஸ் திணைக்களத்துக்கு விசேட கடமைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் நாளாந்த உணவுக்காக பொலிஸ் திணைக்களம் நாளொன்றுக்கு சுமார் 17 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவைச் செலவிடுகின்றது. பொலிஸாரின் சம்பளத்தைத் தவிர்த்து ஏனைய அடிப்படைச் செலவுகளுக்காக 30 லட்சம் ரூபா செலவிட நேரிட்டுள்ளது.

போராட்டத்தின் ஆரம்பம் முதல் கிட்டத்தட்ட 6 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

எனினும் கடமைகளில் ஈடுபட்டுள்ள அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினருக்கான செலவு தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. (க-இ)

# யாசகம் வழங்க மறுத்த வைத்தியர் கொலை

கொழும்பு, ஏப்.30

யாசகம் கொடுக்க மறுத்த ஆயுள்வேத வைத்தியர், யாசகரால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தலங்கம பத்தரமுல்லப் பிரதேசத்திலுள்ள பல்பொருள் அங்காடிக்கு அருகில் கடந்த செவ் வாய்க்கிழமை இரவு நடந்துள்ளது.

கொல்லப்பட்ட வைத்தியர் மாலபே, பொத்துவார வீதியைச் சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வைத்தியர் பல்பொருள் அங்காடியில் இருந்து வெளியேறும்போது, அங்கு இருந்த யாசகருக்கு பணம் கொடுக்க மறுத்துள்ளார்.

அதனால் ஏற்பட்ட வாக்குவாதத்தில், யாசகர், வைத்தியரை கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்துள்ளார் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (க-இ)

# கடுவெல பொலிஸ் நிலையத்தின் வாடகை 10 மாதங்களாக நிலுவை

கடுவெல பொலிஸ் நிலையம் அமைந்துள்ள கட்டடத்தின் வாடகை, கடந்த 10 மாதங்களாகச் செலுத்தப்படவில்லை என்று பொலிஸ் நிலையம் அமைந்துள்ள கட்டடத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடுவெல பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிடமாக ஒதுக்கப்பட்டுள்ள வீடொன்றின் உரிமையாளர், கடந்த 9 மாதங்களாக வாடகைக் கொடுப்பனவை பொலிஸார் செலுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவிக்கையில்;

பொலிஸ் நிலையத்தில் இரண்டு பகுதிகளாக ஒப்படைக்கப்பட்ட முழு கட்டடத்துக்கான செலவை மதிப்பிடுமாறு திறைசேரியிடம் கோரப்பட்டுள்ளது.

திறைசேரியின் மதிப்பீட்டைத் தொடர்ந்து, நிலுவை செலுத்தப்படும் -என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## காலத்தை இழுத்தடித்தல்

நாடெங்கும் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்து இன்றுடன் ஒரு மாதம் பூர்த்தியாகிவிட்டது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் மீரிஹன வீட்டுக்கு முன்பாக கடந்த மாதம் 30ஆம் திகதி முன்னிரவில் ஆரம்பித்த தன்னெழுச்சிப் போராட்டம் பின்னர் காலிமுகத்திடலில் கட்டமைக்கப்பட்ட போராட்டமாகத் தொடர்கின்றது.

தன்னெழுச்சிப் போராட்டத்தின் உக்கிரத்தால் ராஜபக்சக்களின் ஆட்சிப்பீடம் ஆட்டம் கண்டது உண்மைதான். ஆனால் கட்டமைக்கப்பட்ட போராட்ட வடிவமாக மக்களின் எழுச்சி மாற்றமடைந்த பின்னர், தங்களைத்தக்க வைத்துக் கொள்வதற்காக காலத்தைக் கடத்தும் யுக்தியை ராஜபக்சக்கள் கையில் எடுக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

இந்த யுக்தி ஒன்றும் ராஜபக்சக்களினது கிடையாது. அது சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் இராஜதந்திரம். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் 2002ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தார். கிட்டத்தட்ட 2006ஆம் ஆண்டு வரையில் அது தொடர்ந்தது. ஆனால் இதற்கு இடையில் நடைபெற்ற பேச்சுக்களின்போது காலத்தை இழுத்தடித்து விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் யுக்தியை அப்போதைய பிரதமர் ரணில் கையாண்டார்.

இப்போது ராஜபக்சக்கள் அதே யுக்தியைக் கையாள்கின்றார்கள். போராட்டக்காரர்களை இழுத்தடிக்கின்றார்கள்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினையின் விளைவாகத்தான் தன்னெழுச்சிப் போராட்டங்கள் வெடித்தன. அந்தப் போராட்டங்களின் இலக்கு தெளிவானது. ஆனால் அது தற்போது மடைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. நாட்டில் இரண்டு நெருக்கடிகள் சமாந்தரமாகத் தோற்றம் பெற்றுள்ளதான தோற்றப்பாடு காண்பிக்கப்படுகின்றது. பொருளாதார நெருக்கடியின் விளைவாக அரசியல் நெருக்கடியும் ஏற்பட்டிருக்கின்றது.

அரசியல் உறுதிப்பாடின்மைக்கு அரசமைப்பு மாற்றத்தின் ஊடாக தீர்வை அடைந்து, அதன் ஊடாக பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதே போராட்டக்காரர்களின் இலக்காக இருந்தது.

ஆனால் தற்போது ராஜபக்ச சகோதரர்களுக்கிடையிலான முட்டுப்பாடுகள், ஆளும் கட்சியிடையிலான பிளவுகள், இடைக்கால அரசு, அது இது என்று அரசியல் நெருக்கடிகள் எவ்வளவுக்குத் தீவிரப்படுத்தப்பட முடியுமோ அந்தளவுக்குத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மக்களின் நேரடித் தீர்வாக எதிர்பார்க்கப்படும் பொருளாதாரப் பிரச்சினை தொடர்பில் இப்போது பெரிதாக யாரும் அலட்டிக் கொள்ளவில்லை.

விடயங்களைத் திசை திருப்பி காலத்தை இழுத்தடிப்பதன் ஊடாக போராட்டக்காரர்களின் கோபங்களை – கொந்தளிப்பை தணிய வைக்கலாம் என்று ராஜபக்சக்கள் நம்புகின்றனர். பொருளாதார நெருக்கடியை உடனடியாகத் தீர்க்க முடியாத சூழலிலேயே அரசியல் நெருக்கடியைக் காண்பிக்கின்றனர். பொருளாதார நெருக்கடிக்கான தீர்வை எட்டும் இயலுமையை அடையும் வரையில் அவர்கள் இந்த நெருக்கடியைத் தொடர்வதற்கு அனுமதிக்கத்தான் போகின்றார்கள். இதுவே பிரதமர் மஹிந்தவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுக்குமான தொலைபேசி உரையாடலிலும் எதிரொலித்திருக்கின்றது.

நாட்டில் ஒரு மாற்றத்தை எதிர்பார்த்திருக்கும் அனைவருக்கும் இது ஏமாற்றமானதுதான். ஆனால் பௌத்த – சிங்கள பேரினவாதத்தின் பிறவிக்குண[illegible] தானே!

நாளொரு நல்வார்த்தை

"உண்மையான நட்பு ஆரோக்கியம் போன்றது. அதை இழந்து விடும் வரை நாம் அதன் உண்மையான மதிப்பை உணர்வதே இல்லை" - வோல்டன்



# பிரதமர் பதவி ஏல விற்பனைக்கு

## சஜித் கிண்டல்

**கொழும்பு, ஏப். 30**

**இன்று அமைச்சுப் பதவிகளும், பிரதமர் பதவியும் ஏல விற்பனை சூதாட்டத்துக்கு விடப்பட்டுள்ளது, இந்த நாற்காலி பரிமாற்றத்தால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



ஒடுக்குமுறை அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட சுதந்திரப் போராட்டத்தின் 'ஐக்கிய சக்தி பாத யாத்திரை' மூன்றாவது நாளான நேற்று முன்தினம் கல்கமுவவில் ஆரம்பமாகி வரக்காபொலவில் நிறைவடைந்தது. வரக்காபொலவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத்துக்குள் நடத்தப்படும் கட்சித் தாவல்கள் முழுமையான சூதாட்டம். அந்தக் குப்பை மேட்டில் ஐக்கிய மக்கள் சக்தியோ, ஐக்கிய மக்கள் கூட்டணியோ விழப்போவதில்லை.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்று, 20 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் அதி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை உருவாக்கிய அரசாங்கம் இன்று நாட்டை அதல பாதாளத்துக்கு தள்ளியுள்ளது - என்றார். (ஒ-இ)

# சுயாதீன அணியுடன் இந்தியத் தூதர் பேச்சு

கொழும்பு, ஏப். 30

ஆளுந்தரப்பிலிருந்து விலகிய சுயாதீன அணிக்கும், இலங்கைக்கான இந்தியத் தூதர் கோபால் பாக்லேவுக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்று இரவு இடம்பெற்றது.



சுயாதீன அணி தொடர்ச்சியாக வெளிநாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து வருகின்றது. ரஷ்யா, சீனத் தூதுவர்களை ஏற்கனவே சந்தித்திருந்தது. இந்த நிலையில் இந்தியத் தூதுவருடனான சந்திப்பும் அமைந்துள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கை மக்களுக்காக உதவிகளை வழங்கும் இந்திய மக்களுக்கு சுயாதீன அணியினர் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். அத்துடன் இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது. (ஒ-இ)

நாளை

01.05.2022
ஞாயிற்றுக்கிழமை
சித்திரை 18
சித்திரைப்பரணி

சுபநேரம் : 08.57 - 10.27
ராகுகாலம்: 04.27 - 05.57

உலக தொழிலாளர் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி செப்ரெம்பர் மாதம் வரைக்கும் கையிருப்பு

கொழும்பு,ஏப்.30

**மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரிக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய அடுத்த செப்ரெம்பர் மாதம் வரை தேவையான நிலக்கரி கையிருப்பில் உள்ளது என்று வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**



நாட்டில் தற்பொழுது நிலவும் வலுசக்தி, மின்சக்தி மற்றும் எரிவாயு தொடர்பான பிரச்சினைகளின் நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக, வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, வர்த்தக மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் செஹான் சேமசிங்க, அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு முன்னிலையில் நேற்றுமுன்தினம். அழைக்கப்பட்டனர்.

இந்தியன் ஒயில் நிறுவனம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து விலைச் சூத்திரமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளன. இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. எரிபொருள் விநியோகத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க முத்து ராஜவல முனையம் 24 மணித்தியாலங்களும் இயங்குகின்றது. மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருள்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. விமான சேவைகள் மற்றும் மின்சார சபைக்குத் தேவையான எரிபொருள்களை நேரடியாகக் கொள்வனவு செய்வதற்கு அவசியமான சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்குக் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட சகல தரப்பினரினதும் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகின்றது என்று அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை நாட்டின் மின்சாரக் கட்டமைப்புக்குள் இணைப்பதற்கு எதிராகக் காணப்படும் தடைகள் தொடர்பில் குழுவின் உறுப்பினர்கள் விசேட கவனம் செலுத்தினர். இந்தியக் கடன் வசதி மற்றும் உலக வங்கிக் கடனுதவியின் கீழ் எரிவாயு விநியோகம் சாதாரண நிலைக்குக்கொண்டுவரப்படும் என்றும் அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். (சு-இ)

# கோத்தா பதவி விலகினால் ஐ.ம.ச. ஆட்சியமைக்கும்



கொழும்பு, ஏப். 30

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகினால், 113 பெரும்பான்மையுடன் ஐக்கிய மக்கள் சக்தி இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் என கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் கோத்தாபய ராஜபக்சவை பதவி விலகுமாறு கோருகின்றனர். அவர்களின் கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும். தற்போது நாட்டு மக்கள் 'கோ ஹோம் கோத்தா' என்றே கூறுகின்றனர். எனவே ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் இனியும் ஆட்சி புரிவதற்கான தார்மீக நியாயத்தை இழந்துவிட்டதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்சவின் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் ருவிற்றரில் வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இடைக்கால சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு அனைத்து பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து குறிப்பிட்ட காலத்துக்கு அரசாங்கத்தை அமைப்பதற்கு பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

# க.பொ.த.சாதாரணப் பரீட்சை திட்டமிடப்பட்டவாறு நடக்கும்




கொழும்பு.ஏப்.30

2021ஆம் கல்வி ஆண்டுக்கான, கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை திட்டமிடப்பட்டவாறு, எதிர்வரும் மே மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டீ. தர்மசேன தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்கான வினாத்தாள்களை அச்சிடுவதற்கு, காகிதப் பற்றாக்குறை பிரச்சினையாக அமையாது. மே மாதம் 20 ஆம் மற்றும் 21ஆம் திகதியளவில், தொடர்புபடுத்தல் மத்திய நிலையங்களுக்கு வினாத்தாள்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சு-இ)



# ஊழல் வழக்கில் பௌசி விடுவிப்பு

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலிருந்து, முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி விடுவிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில், புனர்வாழ்வு அமைச்சுக்கு நெதர்லாந்து அரசாங்கம் வழங்கிய வாகனத்தைத் தவறாகப் பயன்படுத்தினார் என்று இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அரசாங்க வாகனத்தை முறை கேடாகப் பயன்படுத்தி, 1 மில்லியன் ரூபாவை மோசடி செய்தார் என்று குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு, கொழும்பு பிரதான நீதிவான் நந்தன அமரசிங்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (சு-இ)

# நகரசபை செயலாளர் மீது கழிவு எண்ணெய் வீச்சு



கொழும்பு,ஏப்.30

வத்தளை மாபோல நகரசபையின் செயலாளர் மீது கழிவு எண்ணெய் வீசப்பட்டுள்ளது. மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போது, அங்கு பெரும் குழப்பம் ஏற்பட்டு, ஒரு பகுதி உறுப்பினர்கள் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது மண்டபத்துக்குள் நுழைந்த இனம்தெரியாத நபரொருவர், செயலாளர் மீது கழிவு எண்ணெயை வீசிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். எண்ணெய்த் தாக்குதலுக்கு இலக்கான செயலாளர் வத்தளை தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (சு-இ)

# ஆர்ப்பாட்டத்தைக் குழப்ப முயன்றவர் மடக்கிப்பிடிப்பு



கொழும்பு.ஏப்.30

அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டத்தைக் குழப்ப முயன்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களுடன் நின்றிருந்த நபர், பொலிஸார் மீது தண்ணீர்ப் போத்தலை வீச முயன்றுள்ளார். அங்கிருந்தவர்கள் அவரை மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிம் ஒப்படைத்தனர். (சு-இ)

# ஆர்ப்பாட்டக்காரர் மீது பொலிஸார் தாக்குதல்

## அலரிமாளிகை முன் பதற்றம்

கொழும்பு.ஏப்.30

அரசாங்கத்துக்கு எதிராக அலரிமாளிகைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரை, பொலிஸ் அதிகாரி ஒருவர் தாக்கியதால், அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தைப் பதவி விலகக் கோரி, காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தை அடுத்து, அதற்கு வலுச்சேர்க்கும் வகையில், அலரிமாளிகைக்கு முன்பாகவும் இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த இடத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரை பொலிஸார் நேற்றுத் தாக்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது. இதனால் போராட்டக்காரர்கள் கொந்தளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (சு-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உக்ரைனில் ஐ.நா. செயலாளர் சென்ற பகுதிக்கு ரஷ்யா ரொக்கட் தாக்குதல்

கீவ், ஏப்.30

**உக்ரைன் தலைநகர் கீவ் நகரில் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து கொண்டிருந்த போது அந்தப் பகுதிக்கு அண்மையில் ரஷ்யா ரொக்கட் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் 10 பேர் காயமடைந்துள்ளனர்.**



இதுகுறித்து ஐ.நா. செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், போர் நடைபெற்ற பகுதியை ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டரஸ் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அத்துடன் உக்ரைன் அதிபரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அந்த இடத்திலிருந்து 3.5 கிலோமீற்றர் தொலைவிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்தார்.

ரஷ்யாவின் இந்தச் செயலுக்கு உலக நாடுகள் பலவும் இது காட்டுமிராண்டித்தனமான செயல் என்று கண்டனங்களை வெளியிட்டுள்ளன. இதுகுறித்து ஐ.நா. பொதுச் செயலாளர், 21ஆம் நூற்றாண்டில் போர் என்பது முட்டாள்தனம். போர் கொடூரமானது எனத் தெரிவித்தார். (ச-இ)

# ஆப்கானிஸ்தானில் மீண்டும் குண்டுவெடிப்பு

## 9 பேர் உயிரிழப்பு

காபூல், ஏப்.30

ஆப்கானிஸ்தானின் வடக்குப் பகுதியில் நேற்று இரண்டு இடங்களில் சக்திவாய்ந்த குண்டுகள் வெடித்துள்ளன.

பாக் மாகாண தலைநகர் மசார்இஷரிபில் இரண்டு வாகனங்களைக் குறிவைத்து அடுத்தடுத்து இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில், 9 பேர் கொல்லப்பட்டதுடன் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த வாரம், மசூதி மற்றும் அதை ஒட்டிய மதப் பள்ளிக் கட்டடத்தில் குண்டுவெடிப்பில் 33 ஷியா மக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# பிரதமர் மோடி மீண்டும் வெளிநாடுகளுக்கு 'விசிட்'

புதுடில்லி, ஏப்.30



இந்தியப் பிரதமர் மோடி மீண்டும் தனது வெளிநாட்டு பயணத்தை ஆரம்பித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படு கிறது.

அதன்படி எதிர்வரும் மேமாதம் முதல் வாரத்தில் ஜெர்மனி, டென்மார்க் பிரான்ஸ் நாடுகளுக்குப் பயணம் செய்யவுள்ளார் என வெளியுறவுத்துறை தெரிவித்துள் ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டுவரை அவர் 58 நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளார்.

பின்னர் கொரோனாத் தொற்று காரணமாக அவரது வெளிநாட்டு பயணங்களை ஒத்திவைத்த நிலையில், மீண்டும் தனது வெளிநாட்டு பயணத்தை மே மாதம் தொடங்குகிறார்.

இது நடப்பு ஆண்டில் பிரதமரின் முதல் வெளிநாட்டுப் பயணம். மேலும் பரிஸ் சென்று இம்மானுவல் மக்ரோனையும் சந்திப்பார் என்றும் வெளியுறவுத்துறை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## பணக்காரத் தம்பதியின் முன்மாதிரி

சிட்னி, ஏப்.30

அவுஸ்திரேலியாவின் இரண்டாவது பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த வர்களான ஆண்ட்ரூ - ட்விக்கிரிக் கோலா தம்பதி 2 லட்சம் கோடி ரூபா சொத் துக்களை தொண்டு நிறுவனங்களுக்குக் கொடுக்க முடிவு செய்துள் ளது.

தமது சொத்துக்களுக்குத் தங்களது பிள்ளைகள் வாரிசாக இருக்க மாட்டார்கள் என்றும் அறிவித்துள் ளனர்.

இது குறித்து அவர்கள் கூறுகையில்,

"எமது பிள்ளைகள் இவ்வளவு பெரிய செல்வத்தால் சுமையுடன் வாழவிரும்பவில்லை. நாங்கள் ஒரு வீட்டில் வாழ்கிறோம். எமக்கு ஒரு சிறந்த வாழ்க்கை இருக்கிறது. வாழ்க்கையில் மிக முக்கியமான விடயங்கள் உள்ளன. அதைப் பணத்தால் வாங்க முடியாது. பிள்ளைகள் பெரும் தொகையை மரபுரிமையாகப் பெறப்போகிறோம் என்று நினைப்பதில் பயனில்லை" என்றனர். (ச-இ)

# குழந்தைகளின் பெயரோடு தாய்தந்தையின் பெயர்

## இத்தாலிய நீதிமன்றம் உத்தரவு

உரோம், ஏப்.30

இத்தாலி நாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு அவர்களின் பெயர்களுக்குப் பின்னால் தந்தை, தாய் பெயர் என இருவரினதும் பெயரையும் சேர்க்குமாறு அதிரடி உத்தரவை இத்தாலிய நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

தந்தையின் பெயரை மட்டுமே தனது பெயருக்குப் பின்னால் குழந்தைகள் கொண்டிருக்கின்றன.

இது பாகுபாடு மற்றும் அடையாளத்துக்கு கேடு விளைவிக்கும் என்றும் குழந்தைகளை வளர்த்தெடுப்பதில் தந்தை மற்றும் தாய்க்கு சமபங்கு உள்ளது என அந்தத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரத்தில் தாய், தந்தை இருவரும் ஒப்புக்கொண்டால், யாராவது ஒருவரது பெயரைத் தங்கள் பெயருக்குப் பின்னால் குழந்தைகள் கொண்டிருக்கலாம் எனவும் அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. (ச-இ)

# பெல்ஜியத்தில் சொக்லேட் மூலம் பரவும் 'சால்மோனெல்லா' நோய்



பெல்ஜியம், ஏப்.30

லண்டனில் பெல்ஜியம் சொக்லேட் மூலம் 'சால்மோனெல்லா' நோய் பரவி வருவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

அங்கு 151 குழந்தைகளுக்கு 'சால்மோனெல்லா' நோய்ப் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இதில் 9 குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இந்தத் தொற்று 11 நாடுகளில் பதிவாகியுள்ளது. இதில் அதிகபட்சமாக லண்டனிலேயே 65 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

'சால்மோனெல்லா' நோய் என்பது பக்ரீரியாத் தொற்று. இது மனிதர்கள் மற்றும் விலங்குகளின் குடல்களில் காணப்படுகிறது. இந்த நோய்த் தொற்று ஏற்பட்ட 2 மணிநேரத்தில் காய்ச்சல், வயிற்றுப்போக்கு உள்ளிட்ட அறிகுறிகள் ஏற்படுகின்றன.

மாசடைந்த உணவுப் பொருள்கள், பச்சையான பால் பொருள்கள், நன்கு வேகவைக்காத இறைச்சி ஆகியவைகள் மூலம் இந்தத் தொற்றுப் பரவுகிறது. தற்போது சொக்லேட் மூலம் இந்தத் தொற்று பரவியுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** தந்தையால் எதிர்பாராத நன்மை உண்டு. செலவு கூடும். புதிய முயற்சியை சிலநாள் தள்ளி வைக்க வேண்டியிருக்கும். உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லை என்ற குறை நீங்கும்.

**இடபம்:** இன்று மலைப்போல் வந்த பிரச்சினை பனி போல் நீங்கி விடும். எடுத்த முயற்சி அனைத்தும் நன்மையும், லாபமும் தரும். உடல் ஆரோக்கியப் பிரச்சினை தீரும்.

**மிதுனம்:** தவறு செய்து பிரச்சினையில் மாட்டிக்கொள்ள வேண்டாம். சுய பரிதாபம் வேண்டாம். நண்பர் உங்களால் உயர்வார். எந்த முயற்சியானாலும் தாமதமான பலன்களே கிடைக்கும்.

**கடகம்:** அக்கம் பக்கத்தைச் சேர்ந்தவரால் நன்மை உண்டாகும். தந்தைக்கு தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். கவலை ஒன்று முடிவுக்கு வரும். பிறருக்கு நன்மை செய்வீர்கள்.

**சிம்மம்:** தவறான சிந்தனையின் காரணமாக வீண்பிரச்சினையில் மாட்டாதீர்கள். தொழில், வியாபாரத்தில் கவனத்துடன் செயற்படுவீர்கள். குடும்பத்துக்கு செலவுகளைச் செய்வீர்.

**கன்னி:** உங்களுக்கு வழிகாட்டியாக இருப்பவர் உதவி செய்வார். சிரமப்பட்டு உழைத்தால் உடனடி பலன் இருக்கும். உங்களை அதிகாரி பாராட்டுவார். நிதி நிலை சீராகும்.

**துலாம்:** உங்களின் நேர்மைக்கு பலன் உண்டு. வேலைப்பளு குறையும். அதிர்ஷ்டத்தை நம்பி மனஅழுத்தம் அடைய வேண்டாம். உழைப்பு குறைந்தாலும் மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது.

**விருச்சிகம்:** முன்பு உழைத்த உழைப்புக்கு இன்று பலன் கிடைக்கும். வீடு வாங்குவது பற்றிய கவலை நீங்கும். நட்பு வட்டம் விரியும். பெற்றோர் பெருமிதம் அடைவார்கள். உங்களுக்கு புகழ் கிடைக்கும்.

**தனுசு:** உழைப்பின் மூலம் பெரிய பலன்களை எதிர்பார்க்க வேண்டாம். உங்களால் பலன் அடைந்தவர்கள் நன்றி பாராட்டுவர். உடல் சோர்வு ஏற்படாமல் கவனமாக இருங்கள்.

**மகரம்:** இன்று யாரிடமும் வீண் விவாதம் செய்ய வேண்டாம். சகோதரரால் உங்களுக்குச் சிறு நன்மை ஏற்படும். சகோதரருடன் இருந்த பிரச்சினை இன்று முடிவுக்கு வரும்.

**கும்பம்:** எதிர்பாராத பண வரவால் குடும்பத்தின் கஷ்டம் விலகும். புண்ணியச் செயலுக்காக குடும்பத்தினர் ஒன்றாக இணைவீர்கள். குலதெய்வ வழிபாட்டு முயற்சி வெற்றிகரமாக முடியும்.

**மீனம்:** கடந்த நாள்களில் குடும்பத்தில் இருந்து வந்த வருத்தம் நீங்கும். நண்பர்களிடம் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி ஒற்றுமை வரும். மற்றவருக்கு உதவுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மே தினத்தன்று...

ளது.

மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் மே மாதம் 4ஆம் திகதி வரையான நான்கு நாள்களுக்கான மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. இதன்படி மே தினமான முதலாம் திகதியன்றும் ரமழான் நோன்பு தினமாக எதிர்வரும் மூன்றாம் திகதியன்றும் மின்வெட்டு இருக்காது என்றும் ஏனைய நாள்களில் 3 மணித்தியாலம் 20 நிமிடங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் மின்சார சபை அறிவித்துள்ளது. (அ-ம)

## இலங்கைக்கு...

மு.க.ஸ்டாலின் முன்வைத்த தீர்மான வரைவு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இலங்கைக்கு தாம் செய்யவிருக்கும் உதவிப் பட்டியலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். 368 கோடி இலங்கை ரூபா பெறுமதியான சுமார் 40 ஆயிரம் தொன் அரிசி, 130 கோடி இலங்கை ரூபா பெறுமதியான 137 வகையான உயிர்காக்கும் மருந்துகள், 77 கோடி இலங்கை ரூபா பெறுமதியான 500 தொன் பால்மா என்பவற்றையே மனிதாபிமான உதவியாக தமிழக அரசு வழங்கவுள்ளது.

தமிழக அரசு இந்த உதவியை இலங்கைக்கு வழங்க வேண்டுமாயின் இந்திய மத்திய அரசின் அனுமதி தேவை. அவ்வாறு இந்திய மத்திய அரசாங்கம் அனுமதி கொடுத்தால், இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் மற்றும் துணைத் தூதரகங்கள் வழியாக இந்த உதவி இலங்கைக்கு வழங்கப்படும். இதனால், காலத்தின் தேவை கருதி மிகவிரைவாகவும் போர்க்கால அடிப்படையிலும் இந்த உதவிகளை தமிழக அரசு மேற்கொள்வதற்கு இந்திய மத்திய அரசு காலந்தாழ்த்தாது அனுமதி வழங்க வேண்டும் என்றும் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம)

## வரி உயர்வே...

துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2019ஆம் ஆண்டில் மதிப்புக் கூட்டப்பட்ட வரி விகிதத்தை 8 வீதமாக - பாதியாகக் - குறைத்தமை பெரும் தவறு. தினசரி அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு வரிகளை அதிகரிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. எங்களிடம் உள்ள வருவாய் மற்றும் செலவின இடைவெளியைக் குறைக்க வழிவகை செய்ய வேண்டும்.

அத்தியாவசியப் பொருள்களில் இறக்குமதியை நம்பியிருக்கும் இலங்கை போன்ற ஒரு நாட்டுக்கு தற்போதைய வரி நிலை நிச்சயமாக நிலையானது அல்ல. வரிவிகிதம் 13 வீதமாக அல்லது 14 வீதமாக உயர்த்தப்பட வேண்டும் - என்றார். (அ-ம)

## சர்வகட்சி...

தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் கலந்துரையாடும் கூட்டத்தில் பங்கேற்குமாறு நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் ஜனாதிபதி சமீபத்தில் கேட்டுக்கொண்டார். எனினும், நேற்றுக் காலை நடைபெறுவதாக இருந்த இந்தக் கூட்டம் திடீரென பிற்போடப்பட்டது. அரசாங்கத்தின் ஆதரவை உறுதிப்படுத்துவதற்கே இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்றும், நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரதமருடனான சந்திப்பின் போது ஆளுங்கட்சி சார்பாக 109 எம்.பிக்கள் கலந்துக்கொண்டனர். இதனால், பிரதமருக்கு ஆதரவாக 117 எம்.பிக்களின் ஆதரவு இருப்பது உறுதியாகியதை அடுத்தே சர்வ கட்சிக் கூட்டம் பிற்போடப்பட்டது என்றும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம)

## ஈழத்தமிழர்களுக்கு...

சென்னை, ஏப். 30

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள ஈழத் தமிழர்களுக்கு உதவும் வகையில் தனது தனிப்பட்ட நிதியில் இருந்து இலங்கை மதிப்பில் 2 கோடி ரூபாவை உதவித் தொகையாக அறிவித்துள்ளார் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம்.

தமிழகத்தின் சட்டப் பேரவைக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதில் இலங்கைக்கு தமிழ் நாடு அரசு வழங்கவுள்ள உதவிகள் தொடர்பில் முதலமைச்சர் ஸ்டாலின் உரையாற்றினார். இதன்போதே இந்த உதவித் திட்டங்களின் ஒரு பகுதியாக தனது தனிப்பட்ட நிதியில் இருந்து இலங்கை மதிப்பில் 2 கோடி ரூபா (இந்திய மதிப்பில் 50 லட்சம் ரூபா) தருவதாக ஓ.பன்னீர்செல்வம் அறிவித்தார். சட்டப் பேரவை உறுப்பினர்கள் சிலர் தமது ஒரு மாத ஊதியத்தை இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு வழங்குவதாகத் தெரிவித்தனர். (அ-ம)

## புதிய...

சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்துக் கட்சிகளின் பங்களிப்புடன் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு இணக்கம் எட்டப்பட்டது. பிரதம அமைச்சர், அமைச்சரவை என்பன குறித்த தேசிய அரசாங்கத்தின் வழிகாட்டலுடன்தான் நியமிக்கப்பட வேண்டும்.

அமைச்சுகளின் செயலாளர்கள், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர் உட்பட அரச நிர்வாகக் கட்டமைப்பின் உயர் பதவிகளுக்கான நியமனங்களும் தேசிய சபை ஊடாகவே இடம்பெறவேண் டும் என கொள்கை அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது - என்றார். (ம-44)

## மரண அறிவித்தல்

மலர்வு 15 02 1959

உதிர்வு 29 04 2022



திருமதி

### கமலேஸ்வரி அழகராஜா

(ஓய்வு பெற்ற ஆசிரியர், கொ/இராமகிருஷ்ணா வித்தியாலயம்)

தென்மராட்சி மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு ஹாமஸ் அவனியூ வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலேஸ்வரி அழகராஜா 29.04.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு பரமேஸ்வரி அவர்களின் புத்திரியும், பொன்னம்பலம் அழகராஜா (ஓய்வு பெற்ற மக்கள் வங்கி உதவி முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் அன்னம்மா அவர்களின் மருமகளும், ஜனன்,அனந்தன் சுரேந்தன் (Quantity Surveyor)லசிதா(ஆசிரியர் ,களு/குளோடன் வித்தியாலயம்) ரஷாந்தன் (Digital Marketing)ஆகியோரின் பாசமிகு தாயாரும் மேனகா,கோபிகா ஆகியோரின் மாமியாரும், திருமதி தர்மேஸ்வரி சிவஞானம் (ஓய்வு பெற்ற ஆசிரியர் கொ/இந்துக்கல்லூரி) மகேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், அர்ஜூன், அனிஸ்கா, ஹரிஷன் ஆகியோரின் பேத்தியுமாவர்.செல்வராஜா, காலஞ்சென்ற பரராஜா, சண்முகராஜா, பவளவசனி, விஜய ராஜா ,தேவகி, ரஞ்சினி, நந்தினி ஆகியோரின் மைத்துனியுமாவார் அன்னாரின் பூதவுடல் 30.04.2022 சனிக்கிழமை முதல் 58, ஹாமஸ் அவனியூ வெள்ளவத்தையில் வைக்கப்பட்டு, 02.05.2022 திங்கள் நண்பகல் 12.00 மணிக்கு கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2.00மணியளவில் கல்கிஸ்ஸ பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் - குடும்பத்தினர்
0718266963 / 0112502176 / 0774043264

## வீடு வாடகைக்கு

352/6, இருபாலை வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள (ஐயப்பன் கோயிலுக்கு அருகில்) அமைந்துள்ள 5 அறை, குளியல் அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தரப்படும். நிறுவனங்களுக்கு முன் உரிமை. தனியாருக்கும் வழங்கப்படும் சனி, ஞாயிறு, தினங்களில் பார்வையிடலாம்.

077 350 4910

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 08 . 1930

மறைவு 29 . 04 . 2022



### தம்பு பாக்கியநாதன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு பாக்கியநாதன் நேற்று (29.04.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-இராசம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம்-பூமணி தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீபத்மநாதன், கணநாதன், குருநாதன், சொர்ணலட்சுமி மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாஸ்கரன் (ஜேர்மனி), அருந்ததி, கலைச்செல்வி (சுவிஸ்), தெய்வச்செல்வி (லண்டன்), பார்த்தீபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுமதி (ஜேர்மனி), சிவகுமார் (ஆய்வுகூட உதவியாளர்- யாழ். பல்கலைக்கழகம் கணினிப் பிரிவு), ரவிச்சந்திரன் (சுவிஸ்), தர்மபாலன் (லண்டன்), சிந்துஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜன், பானுஜன், ஷாமினி, உமாசுகி - குகப்பிரியன், லயஸ்ருதி, ரவீணா, தர்மஜா, தேஜஸ்வினி, தெய்வீகன், சிந்துபன், தீபன்ஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர். 077 918 4044

## மரம் முறிந்து வீழ்ந்ததில் பயணிகள் அசௌகரியம்

வவுனியா - புளியங்குளம் - முல்லைத் தீவு பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவிலிருந்து நெடுங்கேணி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்குச் செல்வதற்கான போக்குவரத்து தடைப்பட்டிருந்த நிலையில் சிலமணிநேரத்தின் பின் அந்த மரம் அகற்றப்பட்டு போக்குவரத்துச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. (த-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 17 . 01 . 1936 |  | 29 . 04 . 2022 |

## சந்திரசேகரர் கணபதிப்பிள்ளை (K.S.K)

**ஓய்வுநிலை உத்தியோகத்தர்- சுகாதாரத் திணைக்களம்,**
**கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் - உப தலைவர்**
**கைதடி கிழக்கு சனசமூக நிலைய-போசகர்)**

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரர் கணபதிப்பிள்ளை (K.S.K) அவர்கள் நேற்று (29.04.2022) வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணிக்கு காலமாகிவிட்டார்.

அன்னார் கைதடி கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சந்திரசேகரர் தங்கமுத்து தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், அமரர் செல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும், உமாதேவி அவர்களின் பாசமிகு தந்தையும், லோகநாதன் (விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி) அவர்களின் அன்பு மாமனாரும், சிவசெல்வன் அவர்களின் அன்புமிக்க பேரனும், அமரர் K.S.பொன்னம்பலம் (உரிமையாளர் - வெலிகம ஸ்ரோர்ஸ்-கொழும்பு) மற்றும் சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர் வள்ளிப்பிள்ளை மற்றும் தவரஞ்சினி அமரர்கள் கந்தையா, செல்லத்துரை, சுப்பிரமணியம், சண்முகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் நாகேஸ்வரி, யோகராணி, இராஜினிதேவி ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.04.2022) வெள்ளிக்கிழமை மாலை மூன்று மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"செல்வபதி"**
**கைதடி கிழக்கு, கைதடி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு :- 0777 464 889, 077 051 4632**

(CS 19561) 1/6

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 04 . 07 . 1947 |  | 29 . 04 . 2022 |

## திருமதி
## சுந்தரலிங்கம் மகேஸ்வரி

தாவடி தெற்கு கொக்குவில் பத்தானை வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் மகேஸ்வரி அவர்கள் நேற்று (29.04.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசலிங்கம் அவர்களின் அன்புத் தங்கையும், காலஞ்சென்ற நகுலேஸ்வரன் மற்றும் சுதர்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற மஞ்சு மற்றும் சிவகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரபாங்கன், பிரியங்கா, பவித்ரா, பிருந்தா, பைரவி, நர்த்தனன், ஜனதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**மகள்:- சுதர்சினி**
**மருமகன்:- சிவகுமார்**

**பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவில்.**
**077 300 3809, 021 221 3785, 021 221 1140** (CS 19552) (4/6)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24.07.1940 | 27.04.2022 |

## திரு. தில்லைநாதர் சண்முகதாஸ்

யாழ். நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திரு. தில்லைநாதர் சண்முகதாஸ் அவர்கள் கடந்த (27.04.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லைநாதர் கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், மற்றும் சோமசேகரம், திலகவதி ஆகியோரின் அன்பு சகோதரனும், மற்றும் காலஞ்சென்ற நவரத்தினம், நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், பாலசரஸ்வதி அமரர் வசந்த குமாரி ஆகியோரின் அன்புக் கணவரும், மற்றும் கிருபாமூர்த்தி (பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), அமரர் விஜயகுமார், கிருபாநந்தன் (லண்டன்), கிருபாநந்தினி (இலங்கை), கிரிசா (கனடா), பாரதா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு அப்பாவும், மற்றும் சியாமளாதேவி (பிரான்ஸ்), துளசி (பிரான்ஸ்), கலைச் செல்வி (லண்டன்), கிருபாகரராசா (இலங்கை), செல்வச்சந்திரன் (கனடா), இலங்கேஸ்வரன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அமரர் பஞ்சாச்சரம், கமலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மற்றும் கிசாந்த், கிசா[illegible], திவியா, கவியா, தருண், மதுமிதா, தரிக்ஷா, பவிக்ஷா, யனிஸ்கா, கிசோபன், யுவேகா, துலக்சன், சுதன், சுவர்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வீட்டில் இடம்பெற்று கருதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**தொடர்பு :**
**மகள் - கிருபாநந்தினி (பாப்பா) 077 699 6425**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 • 05 • 1961

மறைவு 30 • 04 • 2020

## அமரர் சண்முகநாதன் சத்தியவரதன் (சந்திரன்)

ஆண்டுகள் இரண்டு ஆனபோதிலும்
பறந்துசென்ற உம் அன்பினைப் பிரிவதனால்
சோகத்தில் நாமிங்கு தவிக்கின்றோமே- நாள்தோறும்
சோகம் எனும் கடல்தனில் மூழ்குகின்றோம்
எத்தனை எத்தனை பொழுதுகள் இங்கு ஆனபோதும்
எம் தலைவன் உங்களுக்கு நிகர் தான் எதுவோ? எம் வாழ்வு
நீங்கள் இல்லாத எம் கோயில் கொண்ட வீடு வெறிச்சோடி
நிம்மதி ஏதுமின்றித் தவியாய்த் தவிக்கின்றோம்
உற்றவொரு துணைபோன்று உம் ஆத்மா எம்முடன்
உடனிருந்து நல்லதொரு வழியதனைக் காட்டுமப்பா
நீங்கள் எமைக் காலமெல்லாம் கண்களிரண்டின் இமைபோல
காத்திடுவீர் எம் குடும்பத்தின் ஒளி விளக்கே...

"சத்தியகிரி"
செட்டி லேன், இணுவில் மேற்கு.

(CS 19560) (4/6)

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 • 09 • 1953

மறைவு 27 • 04 • 2022



## திருமதி குகனேஸ்வரி செல்வராசா (புஷ்பா)

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு, கொழும்பு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குகனேஸ்வரி செல்வராசா அவர்கள் கடந்த (27.04.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராசா-நாகரெத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம் கண்மணி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற செல்வராசா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் நந்தாயினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தங்கராஜாவின் மாமியாரும், கதுசன், டிலான், காலஞ்சென்ற அக்ஷயன் மற்றும் சதுர்ஜன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், காலஞ்சென்ற அன்பானந்தன், உதயேஸ்வரி (பிரான்ஸ்), சுரேந்திரன் (சுரேஸ்-வவுனியா), தயாபரேஸ்வரி (பிரான்ஸ்), சத்தியசீலன் (நியூசிலாந்து), ஜெயதீஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற அன்னலட்சுமி, பத்மநாதன், யோகநாதன், பற்குணதேவி (உருத்திரா), சண்முகநாதன் (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி (வவுனியா), குணபாலன் (பிரான்ஸ்), ஜீவாஞ்சனா (நியூசிலாந்து), இந்திரஜித் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

த.சுரேந்திரன்:- 077 420 4902
த.சத்தியசீலன்:- 077 534 2216
த.கதுசன்:- 076 859 0124

(CS 19553) (4/6)

தகவல்
குடும்பத்தினர்

# பணியாளர் தேவை

பொன்னாலை வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள "விஸ்னு துர்க்கை அம்பாள் உயர் தர சைவ உணவகத்திற்கு" சகல உணவுகளும் செய்யும் சமையல் பணியாளர் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசப்படும்.

தொடர்பு: 077 908 7643
கடை உரிமையாளர்: மூ.வினாயகமூர்த்தி

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர்
திரு. அ.லோகநாதன்
அவர்களின் மாமனார்

## சந்திரசேகரர் கணபதிப்பிள்ளை

(ஓய்வுநிலை உத்தியோகத்தர்-சுகாதாரத் திணைக்களம்)

அவர்களின் இறைபதச் செய்தி கேட்டு எமது கல்லூரிச் சமூகம் ஆறாத் துயர் அடைகிறது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா நிலையான பேரின்பப் பெருவாழ்வு பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 17 - 01 - 1936

மறைவு 29 - 04 - 2022

(CS 19559) (4/6)

கல்லூரிச் சமூகம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி

## மாணவர்கள் கௌரவிப்பு

கொடிகாமம், ஏப்.30

சிறிசச்சிதானந்தா அறக்கொடை நிலையத்தால் கைதடி நாவற்குழி பிரதேசத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் களைக் கௌரவிக்கும் நிகழ்வு சிறி சச்சிதானந்தா ஆச்சிரம நூல் நிலைய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மருத்துவர் கே.ரி.எஸ்.சபாநாதனும், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி கோட்டக்கல்வி அதிகாரியும் சட்டத்தரணியுமான நா.சத்தியநாதன், நாவற்குழி மகா வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் சி.பவளகுமாரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ச-159)

# மரண அறிவித்தல்



## கணபதி நாகமுத்து

(ஓய்வுநிலை பிரதம இலிகிதர் -பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்)

தோற்றம் 15.03.1946

மறைவு 28.04.2022

சரசாலை தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பழையபூங்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நாகமுத்து அவர்கள் கடந்த (28.04.2022) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி சின்னாச்சி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், அரியமலரின் அன்புக் கணவரும், யோசப் பரிமளம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஸ்ரனி திசோக்குமார் (பிரான்ஸ்), ஜேன் பிரதீபா (ஆசிரியர்-சென் ஜோன்ஸ் கல்லூரி), ஸ்ரனி ரஜீவ்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் நல்லூர் பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானசீலன் (உதவி கல்விப் பணிப்பாளர்-தீவகவலயம்), சஜிதா (ஆசிரியர்-மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்), ஜொயிலின் டியோனிசியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிறிஷரா, பிறியானா, ஷெவோன் டாறியோ ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பரமசாமி மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (30.04.2022) சனிக்கிழமை இல.117, பழைய பூங்கா வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்று பரியோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 19562) (4/6)

தகவல்:- குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 • 06 • 1947



மறைவு 28 • 04 • 2022

## மகாலிங்கம் செல்லம்மா (இந்துராணி)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் செல்லம்மா கடந்த (28.04.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் அப்பையா அன்னம்மாவின் அன்பு மகளும், இராமு அன்னம்மாவின் மருமகளும், மகாலிங்கம் அவர்களின் மனைவியும், பால்ராஜ் (ராஜ் சலூன் உரிமையாளர்), அருள்ராஜ், கவிதா (கனடா), அனுராஜ் ஆகியோரின் அன்புத் தாயும், கிருசாந்தினி, மயூரி, பிரேமதாஸ் (கனடா), சுபாசினி ஆகியோரின் மாமியும், வபிசன், சபிசன், சாங்கவி, சாருஜன், சகானா, விஸ்னு, துர்க்கா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

50/16 செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.
077 310 1251, 076 280 6356

(CS 19557) (4/6)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## வாகன வரி அறவீடுகளை தனியாரிடம் குத்தகைக்கு வழங்குவதற்கான விலை மனுக்கோரல் - 2022/2023

மாநகர சபை எல்லைக்குட்பட்ட இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் வாகனத்தரிப்பிட கட்டண அறவீடுகளை மேற்கொள்கின்ற செயற்பாட்டினை தனியாரி டம் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது. ஆர்வம் உள்ள விண்ணப்பதாரர் கள் யாழ் மாநகரசபையில் **விண்ணப்பபடிவத்தினை** பெற்று பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் விபரத்தைக் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித **இறைவரிப்பகுதியில்** உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 18.05.2022 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் : ரூபா 1,000.00
கேள்விப் படிவம் விநியோகித்தல் : 02.05.2022 – 17.05.2022
**(மு.ப 9.00 - பி.ப.3.00 மணிவரை அலுவலக நாட்களில்)**

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் : 18.05.2022 மு.ப 10.00 மணி வரை

கேள்வி திறத்தல் : 18.05.2022 மு.ப. 10.00 மணிக்கு

| இல | விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கக் கூடிய பிணை வைப்பு | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|
| 01 | 1.காங்கேசன்துறைவீதி-ரில்கோ சுற்று வட்டத்திலிருந்து மனோகரா திரையரங்கு வரை<br>2. ஆஸ்பத்திரி வீதி - பருத்தித்துறை வீதியிலிருந்து லைடன் காமன்ஸ் சந்தி வரை<br>3. கஸ்தூரியார் வீதி –ஆஸ்பத்திரி வீதியிலிருந்து நாவலர் வீதி வரை<br>4. மின்சாரநிலைய வீதி முழுமையாக<br>5. C பொன்னம்பலம் வீதி<br>6. வைரவர் கோவில் வீதி<br>7. மணிக்கூட்டு வீதி<br>8. மகாத்மா காந்தி வீதி<br>9. பலாலிவீதி முழுமையாக (மாநகரசபை எல்லைக்குள்)<br>10. ஸ்ரான்லி வீதி முழுமையாக | 3,600,000.00 | 40,000.00 | 1 வருடம் |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் ( தொலைபேசி இல 021 221 5978)

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாநகர சபை யாழ்ப்பாணம்**

(cr.135908) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
06
.
06
.
1928



மறைவு
28
.
04
.
2022

## திருமதி சந்திராவதி கனகரட்ணம்

இல.14, நல்லூர்க் குறுக்கு வீதியைப் பிறப்பிடமாகவும் பலாங்கொடை, நல்லூர் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற ந.கனகரட்ணம் (ஓவசீயர் - பாலங்கொடை) அவர்களின் ஆருயிர் துணைவி திருமதி சந்திராவதி கனகரட்ணம் 28.04.2022 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - கனகம்மா தம்பதியரின் புத்திரியும், பாலேந்திரா, அமராவதி, அச்சுதன் மற்றும் காலஞ்சென்றவர்களான யோகரட்ணம், ஜெயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாரதா (லண்டன்), ரவீந்திரன் (யோகா - ஆசிரியர்), ஆகியோரின் பேரன்புமிக்க தாயும், ஆனந்தா (ஓய்வுபெற்ற பொருளிய லாளர்), பேராசிரியை சண்முகயோகினி (ஆங்கில மொழிக்கற்பித்தல்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புக்குரிய மாமியாரும், கோகுலன் (லண்டன்), பவதாரணி (British Council), ரிஷிகேசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs 857)(2.6)

# கௌரவிப்பு நிகழ்வு

யாழ். 30
'இந்துமதம் காட்டும் ஆன்மிகம்' எனும் விடயத்தில் கடந்த மாதம் 20ஆம் திகதியிலிருந்து நாளை ஞாயிற்றுக்கிழமை வரை 12 தினங்கள் தொடர் ஆன்மிக விரிவுரைகளை நிகழ்த்தி சமய அறிவுப் போட்டிகளை மாணவர்களிடையே நடத்திய மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தனைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை இரவு 8 மணிக்கு சுதுமலை கிழக்கு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.
(ம-14)

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து) திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். பயிலுநர் விற்பனை உதவியாளர் தேவை

எமது சங்கத்தின் கிளைநிலையங்களில் நாளாந்தம் காலை, மாலை பால் கொள்வனவு விற்பனை மற்றும் பால்பொருட்கள் விற்பனை செய்வதற்கு பயிலுநர் விற்பனை உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலைநாட்களில் ரூபா20/- செலுத்திப் பெற்றுப் பூர்த்தி செய்து **16.05.2022** ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பதவி: பயிலுநர் விற்பனை உதவியாளர்**
**சம்பளம்:** கடமையாற்றும் நாளொன்றுக்கு ரூபா518.16சதம். (மேலும் சங்கத்தினால் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கமைவான கொடுப்பனவுகளும் வழங்கப்படும்).
வயது: 40 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
**தகைமைகள்:**
கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி. க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.
**குறிப்பு:** சாரதி அனுமதிப்பத்திரம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பொது நிபந்தனைகள்:
1. நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப் பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிவரப்பூர்த்தி செய்யப்படாத விண்ணப் பங்களும் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**28.04.2022**

(cr.35909(2.6)

## கடை வாடகைக்கு

**பருத்தித்துறை வீதி, மூன்றாம் கட்டை, கல்வியங்காடு** (யாழ்ப்பாணம்) அமைந்துள்ள **நான்கு கடைகள்** வாடகைக்குண்டு.
**077 175 0746, 077 806 9790**

(CS 39518)(4/6)

## நாஹா மருத்துவ நிலையம்

சிறுநீரக பாதிப்பினால் வரும் புரதம் வெளியேறல், ஈரல் பாதிப்பு, கொடூரமான நீர்ழிவு புண்கள், பாரிசவாதம், மூட்டுவாதம், முழங்கால் வீக்கம்
அற்புத மருந்தியல் **T.P.: 077 321 2740**
வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23
.
03
.
1932



மறைவு
10
.
05
.
2021

## திரு. தில்லையம்பலம் மார்க்கண்டு

(பாலாவோடை, களபூமி, காரைநகர்)
இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் - நீர்ப்பாசன திணைக்களம்

(திதி – 29.04.2022)

நீண்ட நெடிய உருவம் நிமிர்ந்த நடை
மலர்ந்த முகம் மாசில்லாச்சிரிப்பு
சிங்காரத்தமிழில் சிந்துபாடும் குரல்
வஞ்சமிலா மனம் வாஞ்சையான பேச்சு
நாடி வந்தோரை வாரியணைக்கும் கைகள்
எல்லாமே நொடிப்பொழுதில் எமன் கையில்!!!

பாசத்தின் திருவுருவாய் பார்போற்ற
பண்புடமை காத்து பக்குவமாய் வழிநடத்தி
வாழ்ந்த வாழ்க்கையை வரலாறாய் மாற்றி - காலன்
வஞ்சகமாய் பறித்துவிட்டான் உன்னுயிரை
நிஜத்தில் மறைந்து நினைவில் நிறைந்ததால் - கண்களில்
நீர்மல்க நிற்கின்றோம் நிர்க்கதியாய்!!!

தரணி போற்றும் தனயனாய் தமயனாய் தம்பியாய்
தன்னவள் மனம்கவர்ந்த காவலனாய் தன்னிகரில்லாத்
தந்தையாய் பேரனாய்
ஊர்போற்றும் சேவகனாய் தோள்கொடுக்கும் நண்பனாய்
உன்பணி போதுமென்று சிதம்பரச்சிவன் தாள் சேர்ந்து
ஆறிருத்திங்கள் ஆனாலும் ஆறாத்துயரோடு
ஆண்டவனை இறைஞ்சுகின்றோம் ஆத்ம சாந்திக்காய்!!!

ஓம் சாந்தி.......

அன்பு மனைவி, ஆருயிர் பிள்ளைகள், பாசமிகு மருமக்கள் பற்று மிக்க பேரப்பிள்ளைகள்

16-4/4,1வது சப்பல் ஒழுங்கை வெள்ளவத்தை, தொலைபேசி: 0112 505 713

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
22 . 11 . 1933



இறப்பு
26 . 04 . 2022

## திரு.இலகுப்பிள்ளை றவுடேந்திரன்

யாழ். சங்கானையைப் பிறப்பிடமாகவும், சித்தன்கேணியையும் அவுஸ்திரேலியா Sydney ஐயும் வசிப்பிடமாகவும் கொண்ட இலகுப்பிள்ளை றவுடேந்திரன் அவர்கள் கடந்த (26.04.2022) செவ்வாய்க்கிழமை சிட்னியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலகுப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், காந்திமதி அவர்களின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரன், விக்னேஸ்வரி, விக்னராஜா, விக்னரஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாவதி, குமரகுருபரன், உமா ஆகியோரின் மாமனாரும், கவிஜா, கவிசாந், ஜனார்த்தன், ஜனாதினி, கேசவி, கேசவன் ஆகியோரின் பாசமிகு பேரனும், விஜயபாலன் (பிரித்தானியா), விஜயகுமாரி (பிரித்தானியா), காலஞ்சென்றவர்களான செல்வரஞ்சிதம், விஜயரட்ணம், விஜயலஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Sydney இல் இன்று (30.04.2022) சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அவுஸ்திரேலியா,
சிட்னி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 19550) 1/6

# 31ஆம் நாள் நினைவேந்தலும் நன்றி நவிலலும்

மண்ணில்
14 06 1969



விண்ணில்
02 04 2022

## அமரர் திரு. நவரத்தினசிங்கம் வாகீசன்

B.Sc.Eng.(Hons), ACMA, PgDBM
(முன்னாள் பணிப்பாளர், SEAGULL PROPERTY DEVELOPERS (PVT) LTD)

கடந்த 02.04.2022 அன்று எங்களை விட்டு பிரிந்த அமரர் நவரத்தினசிங்கம் வாகீசன் அவர்கள் மறைந்த செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மற்றும் இணையத்தளங்களின் மூலமாகவும், மலர்வளையங்கள் வைத்தும் துயரை பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது துயர் கலந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 02.05.2022 திங்கட்கிழமை குடும்ப அங்கத்தவர்களுடன் வீட்டில் நடைபெற்று ஆத்மசாந்தி பிரார்த்தனை மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகள் மறுநாள் செவ்வாய்க்கிழமை 03.05.2022 காலை 11.00 மணி முதல் பம்பலப்பிட்டி இல. 75, லோரன்ஸ் வீதி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் நினைவஞ்சலியிலும் மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
பிரிவால் துயறுரும்
குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்.

(cr.35901)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் கிட்டிணன் கோபாலன்

திதி: துதிகை

## அமரர் கோபாலன் தவமணி (சகுந்தலா)

திதி: துவாதசி



கடந்த (03.03.2022) வியாழக்கிழமை மற்றும் (29.03.2022) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப தெய்வங்களின் அந்தியேட்டிக்கிரியைகள் மற்றும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் (28.04.2022) வியாழக்கிழமை பிரான்ஸ் Sarcelles இல் உள்ள அன்னார்களின் இல்லத்தில் காலை 10.00 மணிளயவில் நடைபெற்றது.

அதனைத் தொடந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் இன்று (30.04.2022) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் 46 AV, Pierre Curie 95400, Arnonvilla, France இலும், கூவில், புலோலி தென்மேற்கு, புலோலி எனும் முகவரியில் அமைந்துள்ள அன்னார்களின் இல்லத்தில் நடைபெற வுள்ளதனால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னார்களினது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார்களின் மரணச்செய்திகேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIP Book ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள், மலர் மாலைகள், சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவி களையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கூவில்,
புலோலி தென்மேற்கு, புலோலி.

குடும்பத்தினர்
021 226 0045

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உதயன்" மே முதல் ரூ. 50/-

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பத்திரிகைக்கான காகிதாதிகள், அச்சுப் பொருள்கள் மற்றும் எரிபொருள் விலைகள் மலையளவுக்கு சடுதியாக அதிகரித்திருக்கின்றன. கடந்த சில மாதங்களாகவே நீடித்துக் கொண்டிருக்கும் இந்த நெருக்கடிகளைத் தாங்கியவாறு வெளிவந்த "உதயன்", இயலுமை நிலையையும் தாண்டிய இந்த அசாதாரண நிலையைச் சமாளிப்பதற்காக இம்மாதம் முதலாம் திகதி முதல் விலையில் சிறிய அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத் துக்கு "உதயன்" ஆளாகியிருந்தான்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கும் நிலையில், அச்சிடுவதற்காக காகிதாதிகள் மற்றும் ஏனைய பொருள்களின் விலை உயர்வும், எரிபொருள் விலையேற்றங்களும் விலையில் மீண்டும் சிறு அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு "உதயனை" ஆளாக்கியுள்ளன.

01.05.2022 முதல் உதயன் நாளிதழின் விலையை 50 ரூபாவாகவும், உதயன் வார இதழின் (சஞ்சீவி – உதயன்) விலையை 60 ரூபாவாகவும் நிர்ணயிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது.

பல்வேறு நெருக்கடிகள் சூழ்ந்த காலத்தில் "உதயனுக்கு" பக்கபலமாக நின்ற வாசகர்கள், தற்போதைய நெருக்கடி நிலைமையை உணர்ந்து தோளோடு தோள் நிற்பார்கள் என்று "உதயன்" நம்புகின்றான். இந்த விலை மாற்றத்தை பொறுத்தருளி, இதுவரை காலமும் வழங்கிய உங்கள் ஆதரவை தொடர்ந்தும் வழங்குவீர்கள் என்று அன்புரிமையோடு "உதயன்" எதிர்பார்க்கின்றான். எதிர்காலத்தில் நாட்டின் நிலைமை சுமுகமாகும் போது, மீண்டும் பழைய விலைக்கே "உதயன்" உங்கள் கைகளில் தவழுவான் என்பதையும் இந்தருணத்தில் உறுதி செய்கின்றோம். (ஆ–ர்)

☆ எரிவாயு சிலிண்டர்
☆ தீப்பெட்டிகள்

## பதுக்கிய பொருள்கள் யாழில் நேற்று மீட்பு!

கொழும்பு, ஏப். 30

யாழ்ப்பாணத்தில் பெருமளவில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த தீப்பெட்டிகள், எரிவாயு சிலிண்டர்கள் என்பன பாவனையாளர் அதிகார சபையின் அதிரடி நடவடிக்கையில் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட பாவனையாளரிடமிருந்து கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் பாவனையாளர் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது, வர்த்தக நிலையமொன்றில் அதிகூடிய விலைக்கு விற்பனை செய்வதற்காகப் பதுக்கிவைக்கப்பட்டிருந்த எரிவாயு சிலிண்டர்கள், தீப்பெட்டிகள் என்பனவே இவ்வாறு மீட்கப்பட்டன. அவை நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்டதுடன் அந்த வர்த்தகருக்கு எதிராக வழக்கும் பதிவு செய்யப்பட்டது. (அ–ம)

### இடைக்கால...

அத்துடன், பிரதமர் மஹிந்த ராஜபக்சவை பதவியில் இருந்து நீக்குவது அல்லது புதிய பிரதமரை நியமிப்பது என்ற விடயத்தில் ஜனாதிபதி தொடர்ந்தும் மௌனம் காத்துவருகின்றார். இதனால் அரசியல் குழப்பம் நீள்கின்றது.

பொதுஜன பெரமுன அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டு, நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 11 கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல், ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை, சர்வக்கட்சி இடைக்கால அரசு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக அலசி ஆராயப்பட்டுள்ளன.

அரசின் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக, தேசிய ஒருமித்த அரசாங்கமொன்றை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், அதன் முதற்கட்டமாக நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் பங்களிப்புடன் தேசிய சபையொன்றை நியமிப்பதற்கும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கட்சிப் பிரதிநிதிகள் முன்வைக்கும் பொதுத் தீர்மானத்துக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவளித்தால் தாம் அதற்கு இணங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

சர்வகட்சி அரசை அமைப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக கலந்துரையாடலில் கலந்துகொண்ட பிரதிநிதிகளில் ஐந்து பேரை பெயரிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

பொதுஜன பெரமுன உட்பட நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அரசியல் கட்சிகளின் கருத்துக்களை பெற்றதன் பின்னர், முறையான வேலைத்திட்டமொன்றை உருவாக்குவது தொடர்பாகவும் மேற்படி சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது. (அ-ம-44)

### பிரதமர்...

என வலியுறுத்தி மகா சங்கத்தினர் இன்று தீர்மானமொன்றை நிறைவேற்றவுள்ளனர்.

அத்துடன், இடைக்கால அரசுக்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறும் நோக்கில், நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களையும் மகாசங்கத்தினர், இன்று பொதுமேடைக்கு அழைத்துள்ளனர்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட பேராசிரியர் அகலகட சிறிசுமண தேரர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

'புதிய பிரதமரின்கீழ் மட்டுப்படுத்தப்பட்ட அமைச்சரவையின்கீழ் சர்வக்கட்சி இடைக்கால அரசையே மகாநாயக்க தேரர்கள் எதிர்பார்த்தனர். தேசிய சபை ஊடாக நடவடிக்கை இடம்பெற வேண்டும், ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தனர். மக்களும் இதனையே கோருகின்றனர்.

மகாசங்கத்தினர் ஆயிரம் பேர் கொழும்புக்கு வருகின்றனர். இதன்போது காத்திரமான முடிவுகள் எடுக்கப்படும். மகாசங்கத்தினரின் கோரிக்கையை ஆட்சியாளர்கள் ஏற்காவிட்டால், மகாநாயக்க தேரர்களின் ஆசியுடன் அனைத்து அரசியல் கட்சிகளையும் புறக்கணிக்கும் முடிவு எடுக்கப்படும்' - என்றார்.

'மகாசங்கத்தினரின் சந்திப்பு இடம்பெறவுள்ளது. இதன்போது புதிய பிரதமரின் கீழ்தான் இடைக்கால அரசு என்ற தீர்மானம் நிறைவேற்றப்படும். அதன்பின்னர் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனும் சந்திப்பொன்று இடம்பெறும். இதன்போது கட்சி தலைவர்களுக்கு மகா சங்கத்தினர் ஆலோசனை வழங்குவார்கள்' என்று ஓமல்பே சோபித தேரர் அறிவித்தார்.

மகா சங்கத்தினருக்கும், கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. சர்வக்கட்சி இடைக்கால அரசுக்கு கட்சித் தலைவர்களை ஒன்றிணைப்பதற்கான நகர்வாகவே இது கருதப்படுகின்றது. பொதுஜன பெரமுனவுக்கும் இந்த மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும், பங்கேற்பது குறித்து அந்தக் கட்சி முடிவு எடுக்கவில்லை என தெரியவருகின்றது. (அ-ம-44)

### இந்த...

பற்றப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

இலங்கையில் வாழுகின்ற அத்தனை தொழிலாளர்களும் தற்போது வாழ்வதற்கு வழியின்றி வாழ்க்கைக்காக போராடுகின்றனர். ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளமாக இரண்டு லட்சம் தந்தாலும் இன்றைய நிலையில் வாழ முடியாது. அதுபோன்று அத்தனை உழைப்பாளர்களும் அடுத்தவேளை உணவுக்கு அலையும் நிலை இன்று உருவாகியிருக்கின்றது. இந்த நிலைக்கு இலங்கையில் உள்ள அத்தனை அரசியல் கட்சிகளும் காரணம் என்பதனை வலியுறுத்தி இளையோர் இன்று வீதியில் இறங்கியுள்ளனர்.

வருடந்தோறும் நாம் நடத்தும் மேதின பேரணியாலோ, கூட்டங்களாலோ எதுவும் நடந்துவிடப் போவதில்லை. இது கடந்தகால வரலாறு. இந்த நாளை அரசியல்வாதிகளே தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். இதுவே காலம் காலமாக நடைபெறுகின்றது. இவ்வருடமே நாளை வாழ வழியில்லாத துக்கநாளாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பிரகடனப்படுத்துகின்றது.

ஒவ்வொரு அதிபரும், ஆசிரியரும் இந்நாளை துக்கநாளாக கருதி அவரவர் வீடுகளில் இருந்து பிரார்த்தனை செய்வோம் என கேட்டுக்கொள்கின்றோம். இவ்வருடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எந்த மேதின ஊர்வலத்திலும் மேதின கூட்டங்களிலும் பங்குபற்றுவதில்லை என தீர்மானித்துள்ளது - என்றுள்ளது. (அ-ம)

### 'பகைவர்க்கும்...

என்று தனியாக அனுப்ப வேண்டாம். அனைவருக்குமாக அனுப்புங்கள். அனைத்து இன மக்களுக்கும் இணைந்துதான் இந்த நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம் என்று அவர்கள் சொன்னார்கள். இதுதான் தமிழர் பண்பாடு என்று புகழாரம் சூட்டினார் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

இலங்கைக்கு நிவாரண உதவிகளை அறிவித்த பின்னர் சட்டப் பேரவையில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலச்சக்கரம் இலங்கை மக்களை அலைக்கழித்து எங்கோ கொண்டு போய் நிறுத்திவிட்டது. இருப்பினும், இன்றைய நாள் மனிதாபிமான அடிப்படையில் நாம் கைகொடுக்க வேண்டும் என்பதே இந்த அரசினுடைய நிலைப்பாடு ஆகும். தற்போது இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கான காரணம், காரியத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. அதேநேரத்தில், அங்குள்ள மக்கள் படக்கூடிய துன்பங்கள், துயரங்கள் நம் அனைவருடைய மனதிலும் சோகத்தை உருவாக்கியிருக்கிறன. இலங்கை முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு மிகக் கடுமையாக இருக்கிறது. பெற்றோல், டீசலுக்காக வாகனங்கள் பல மணி நேரம் வரிசையிலே காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மண்ணெண்ணெய் வாங்க பொது மக்கள் 6 மணி நேரம் காத்திருக்க வேண்டிய அவல நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இரசாயன உரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதால், மலையகப் பகுதிகளில் தேயிலை விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை நாடு முழுவதும் உயிர்காக்கும் பல மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளில் இரசாயன உரம் கிடைக்காதது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. சாதாரணமாக ஆயிரத்து 200 ரூபாவுக்குக் கிடைத்த உர மூடை தற்போது 32 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனையாகிறது என்று த்கவல்கள் தெரிவிக்கின்றன. பால் விலை, பால்மா விலை, உணவுப் பொருள்கள் விலை என அனைத்தும் பல நூறு மடங்கு உயர்ந்துவிட்ட காரணத்தால் பச்சிளங் குழந்தைகளும்கூட துன்பத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்ற செய்தி கேட்டு நம் நெஞ்சம் பதைபதைக்கிறது.

அண்டை நாட்டுப் பிரச்சினையாக இதை நாம் பார்க்க முடியாது. அங்கு யார் ஆட்சியில் இருக்கிறார்கள்; அவர்கள் எத்தகையவர்கள் எனப் பார்க்க இயலாது. அந்த நாட்டு மக்களுக்கு நம்மால் ஆன உதவியை நாம் செய்தாக வேண்டும் என்பதைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன். இலங்கையில் இருந்து இத்தகைய செய்திகள் வந்ததுமே, ஈழத் தமிழ் மக்களுக்கு நம்மால் ஆன அனைத்தையும் வழங்குவோம் என்று நான் அறிவித்தேன். அப்போது அதனை அறிந்து இலங்கைத் தமிழர் தலைவர்களும், சில தமிழ் அமைப்புகளும் எனக்கு வைத்த கோரிக்கை, 'தனியாகத் தமிழர்களுக்கு மட்டும் உதவி என்று அனுப்ப வேண்டாம். இலங்கை மக்களுக்கு என்று பொதுவாக அனுப்புங்கள். அனைத்து இன மக்களும் சேர்ந்துதான் இந்த நெருக்கடியை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்' என்று சொன்னார்கள். இதுதான் தமிழர் பண்பாடு. 'பகைவர்க்கும் அருள்வாய் நன்நெஞ்சே' என்பதைப் போல, இலங்கைத் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. இந்த நிலையில், ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்காக நாம் உதவிகள் செய்தாக வேண்டும் - என்றார். (அ-ம)

### பரீட்சை...

ராஜா ஜீவராணிபுனிதா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அடுத்த நிலையில் எண்மர் பரீட்சை ஆணையாளர்களாக இருப்பர். தென்மராட்சி மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜீவராணி அம்மையார் இந்த நியமனத்தை பெற்றிருப்பது பரீட்சைத் திணைக்களத்தில் தமிழ் பெண்ணொருவர் அடைந்த உயர் பதவி நிலையாக கருதப்படுகிறது. (அ-ம)

### திங்கள்...

விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை வருகின்ற காரணத்தால் மே தினத்துக்கு மறுநாளான திங்கட்கிழமை அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதி தேவை

அனுபவமுள்ள வாகன சாரதி தேவை.
தொடர்புகளுக்கு: 077 843 5425

## திருமாங்கல்யம்

அரச உத்தியோகம்/ வெளிநாட்டு வரன்களை எதிர்பார்க்கும் மணமக்கள் தொடர்புகொள்ளவும்.
077 120 4651, 077 120 4652
35, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வசாவிளானில் ஒட்டகப்புலத்தில் 39 பரப்புக் காணி 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.**
❖அச்சுவேலி தெல்லிப்பழை பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி
❖பிரதான வீதியில் இருந்து 50 M தூரத்தில்
❖ஒட்டகப்புலம் றோ.க.த.க. பாடசாலைக்கு அருகாமையில் 14 அடி பாதையுடன்.
❖அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 02 KM தூரத்தில்
❖பரப்பின் விலை 5 லட்சம்
(CS 19563A) (4/6)
தொடர்பு: 077 9116 983

## சமையலாள் தேவை

யாழ். நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக் கூடிய ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
077 959 2628


## கல்லுண்டாயில் விபத்து: ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 30

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லுண்டாய் பகுதியில் நேற்று இரவு 9 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் மதகுரு ஒருவர் காயமடைந்தார். யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பட்டா ரக வாகனம் திடீரென நிறுத்தப் பட்டதை அடுத்து, பட்டா வாகனத்தின் பின்னால் வந்த குறித்த மதகுரு வாகனத்துடன் மோதுண்டு காயமடைந்தார். மாடு குறுக்கே சென்றதால்தான் பட்டா வாகனத்தை நிறுத்த வேண்டி ஏற்பட்டது என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-125)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வயாவிளானில் 42 பரப்புக் காணி 2 பரப்பாகவும் 2 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு.**
❖வயாவிளான் மகா வித்தியாலயத்தில் இருந்து (பலாலி வீதி) 1km தூரம்.
❖வயாவிளான் தபால் கந்தோர் அருகாமை (300m தூரம்)
❖14 அடி பாதையுடன்
❖1 பரப்பின் விலை மூன்று இலட்சம்
❖அச்சுவேலி-தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து 800m தூரம்
(CS 19563B) (4/6)
074 043 6599, 074 043 6375

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கிவரும் **புடைவைக் கடை** ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் மற்றும் வேலை பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். (சுன்னாகத்தை அண்மித்த பகுதிகளில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது)
077 172 3554

## வேலையாள்கள் தேவை

ஐசிங்கேக், கேக், Gato Cake, அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை. சம்பளம் 75,000/- ரூபா உணவு தங்குமிட வசதி உண்டு (ஆண்,பெண்) இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். அனுபவத்திற்கேற்ற மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். (CS19556) (4/6)
077 368 6129

## சாரதி தேவை

எமது நிறுவனத்தில் வேலைசெய்ய அனுபவமுள்ள சாரதிதேவை. இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் வாகனம் செலுத்தக்கூடிய அனுபவம் 5 வருடம்
வயது : 25 - 50
விண்ணப்பதாரிகள் பின்வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
076 287 8655

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு இரவு நேர **கிராபிக் டிசைனர் (Graphics Designer)** தேவை.
(முழுநேரம் / பகுதி நேரம்)



ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையுடன் **02.05.2022 திங்கட்கிழமை மாலை 05.00 மணிமுதல் 7.00 மணிவரை நேரில் சமுகம்தரவும்.**
**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரம் பகுதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
14 அடி பாதையுடன்
நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 2 KM தூரம்
நல்லூர் கந்தசுவாமி கோவிலிருந்து இருந்து 3 KM தூரம்
**பார்வையிடும் நேரம் :**
**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை**
**1 பரப்பின் விலை** 750,000/=
தரகர் தேவையில்லை
**ஜெயம் 077 8147 389**
**077 2417 589**
(CS 19559) (4/6)

## விற்பனையாளர் தேவை

மிக விரைவில் **ஆரம்பிக்கப்படவுள்ள வியாபார நிலையத்துக்கு** அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை.
வயது : 25 - 45
076 287 8655


## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 01 . 1938 — மறைவு 27 . 04 . 2022



### திருமதி தபேந்திரன் இராஜேஸ்வரி

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தபேந்திரன் இராஜேஸ்வரி அவர்கள் கடந்த (27.04.2022) புதன்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா- பவளம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற சுகிர்தகுணநாயகம் தபேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், உஷந்தினி, (காலஞ்சென்ற ரமாலினி), சாமினி, வாசுகி, தவராஜன், யோகந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், (காலஞ்சென்ற நவராஜா), (காலஞ்சென்ற ஜெயக்குமார்), ஸ்ரீகுமார், சிவசக்தி, சற்குணநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், (காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி), புவனேஸ்வரி, (காலஞ்சென்ற ஜெயச்சந்திரன்), ஜெயபாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனுஷன், தமயந்தி, தாட்சாயினி, சதீசன், தர்சன், பிரியகாந், தீப்சன், சிந்துஜா, பிரசாந், கவிசாந், தனுஷா, சில்வியா, நிசாந்தி, சேயோன், பானுசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டனிசா, டிவ்யனா, பகிஷனா, மதுமிலா, கர்மிசா, துஷிந்தன், வலக்ஷன், நிவோஷன், தருக்ஷன், லக்ஷயா, சௌமியா, தருண்குமார், லேகாஸ்ஸ்ரீ, பிரதீசன், மதுமிதா, விஷாலினி, விஷ்ணு, பிரிஷா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 08.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவகுலவீதி, உரும்பிராய் மேற்கு,உரும்பிராய்.**
**077 728 3681**
(CR 8349) (4/6)
**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 03 . 1945 — மறைவு 26 . 04 . 2022



### திருமதி உருக்குமணிதேவி கனகராசா

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியை வாழ்விடமாகக் கொண்ட திருமதி உருக்குமணிதேவி கனகராசா அவர்கள் கடந்த (26.04.2022) செவ்வாய்க்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் முன்னாள் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி அதிபர் அமரர் கனகசபை அமரர் தில்லைநாயகம் தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி அதிபர் அமரர் சுப்பிரமணியம் கனகராசாவின் அன்பு மனைவியும், மஞ்சுளா கணேசலிங்கம், Dr அருள் கணேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் கதிர்காமநாதன், ஸ்ரீபத்மநாதன், லோகநாதன், ஞானசகுந்தலா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கணேசலிங்கம், Dr லைக்குயின் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தர்சினி, திலகன், றோசான், ஈசான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தவநாயகம் (உறுப்பினர் வலி.கிழக்கு பிரதேசசபை) அருந்ததி, சிவசக்தி ஆகியோரின் மைத்துனியும், தமிழ் நிலவனின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் சிறுப்பிட்டி குடும்ப இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 19551) (4/6)
**தகவல்:- தவநாயகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.